# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 19 ஞாயிற்றுக்கிழமை(05.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 340


## செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் உதவியுடன்

# யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை அனுப்பிவைக்க இந்திய அரசிடம் வலியுறுத்து

## பிரதமர் மன்மோகன் சிங்குக்கு டாக்டர் இராமதாஸ் கடிதம்





சென்னை,நவம்பர் 5

**யாழ்ப்பாண தீபகற்பத்தில் வாழும் ஆறுலட்சம் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்களையும் மருந்து வகைகளையும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் உதவியுடன் இந்திய அரசு அனுப்ப வேண்டும்.**

**பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் இராமதாஸ் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் இதனை வலியுறுத்தி உள்ளார்.**

மன்மோகன் சிங் தலைமையிலான புதுடில்லி மத்திய அரசாங்கத்தில் பாட்டாளி மக்கள் கட்சியும் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

ஈழத்தமிழர்களுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படவேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டி டாக்டர் இராமதாஸ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் - அங்கே அமைதி ஏற்படும் என்று உலகத் தமிழர்கள் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில், ஜெனிவாவில் நடைபெற்ற சமரசப்பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்திருக்கிறது. தமிழர்கள் அனைவருக்கும் அது பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

யாழ்ப்பாண தீபகற்பத்தில் வசிக்கும் 6 லட்சம் ஈழத்தமிழர்களுக்குத் தேவையான

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இருந்து இன்று 300பேர் யாழ்ப்பாணத்துக்கு

திருகோணமலை, நவ.5

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று ஆரம்பமாகின்றது.

வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு பஸ்கள் மூலம் அழைத்து வரப்பட்டுள்ள 300 பயணிகள் இக்கப்பலில் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்றும் -

மற்றொரு தொகுதியினர் யாழ்ப்பாணத்தில் இருந்து திருமலைக்கு அழைத்துவரப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் ஒன்றுவிட்ட ஒருநாள் திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தனியார் விமான சேவை நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இச்சேவை வாரத்தில் இருதினங்கள் நடைபெறும் என்று கூறப்பட்டது. (1-151)

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாத இறுதியில் இந்தியா விஜயம்

புதுடில்லி,நவ.5

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்மாதம் 25ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவரது இந்திய விஜயத்தின் போது, இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகள் குறித்து பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்துவார் என்று அறியப்படுகிறது.

உத்தராஞ்சல் பிரதேசத்தின் டெஹ்ராடன் நகரில் நடைபெறும் சர்வதேச் மேயர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வரும் இலங்கை ஜனாதிபதி மூன்று நாள்கள் இந்தியாவில் தங்கி இருப்பார்.

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் நடைபெறும் அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் உருப்படியான முன்னேற்றம் எதுவும் இல்லாததால் இலங்கையின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதில் இந்தியா அதிக

(10ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் கிளைமோர் 2 கடற்படையினர் உயிரிழப்பு

திருகோணமலை,நவ.5

திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டைக்கு அருகில் அல்விஸ் தோட்டத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 2 கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இரு கடற்படையினர் காயமடைந்தனர்.

ரோந்து சென்ற படையினரை இலக்கு வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-151)

## பாதுகாப்பு உத்தரவாதம் கிடைத்தால்தான் கடல் வழியாகப் பொருள் அனுப்பமுடியும்

### செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவிப்பு

கொழும்பு,நவ.5

யாழ்ப்பாணத்துக்கான பொருள்களை உரிய பாதுகாப்பு உத்தரவாதம் கிடைக்கும் நிலையில்தான் கடல்வழியே கொண்டுசெல்ல இயலும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

தேசிய சட்ட வாரத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ஸ்ரீலங்காவின் முன்னாள் கொள்கை வகுப்பாளர் மனேல் அபேயசேகரவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பிரதிநிதி தூன் வண்டென் ஹோவ் பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்துக்கான பொருள்களை உரிய பாதுகாப்பு உத்தரவாதம் கிடைக்கும் நிலையில்தான் கடல்வழியே கொண்டு செல்ல இயலும். இது விடயம் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசிவருகிறோம். ஸ்ரீலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் இது தொடர்பில் ஒப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை எழுதுவதற்குச் சென்ற வாகரை மாணவர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்

கொழும்பு, நவ.5

மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளி மற்றும் வாகரை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்கள் நேற்றைய தினம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றமுடியாது ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட மாணவர்கள் மாங்கேணி மற்றும் கஜுவத்தை சோதனைச் சாவடிகளூடாகப் பயணித்தே மேற்படி பரீட்சை நிலையங்களுக்குச் செல்ல வேண்டும். எனினும், இந்த மாணவர்களின் பயணத்துக்கு சோதனைச் சாவடியில் நின்ற படையினர் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க மறுத்துவிட்டனர் என்றும்-

எனினும் பரீட்சை எழுதுவதற்காக கட்டாயம் செல்லவேண்டியதன் அவசியத்தை மாணவர்களும், ஆசிரியர்களும் படைத்தரப்புக்கு எடுத்துக் கூறியதுடன் காலம் தாமதித்தேனும் பரீட்சை நிலையங்களுக்குச் செல்லத்தீர்மானித்து சோதனைச் சாவடியைக் கடந்து பயணித்தனர் என்றும்-

அவ்வேளை அங்கு எறிகணை வீழ்ந்து வெடித்ததை அடுத்து அச்சமடைந்த மாணவர் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலையில் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டியேற்பட்டதாகவும் தெரியவந்தது.

கதிரவெளி மகாவித்தியாலயம் மற்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## காலநிலை மாற்றத்தைக் கருத்திற் கொண்டு போதியளவு பொருள்களை உடன் அனுப்புக!

### குடாநாட்டு நெருக்கடி குறித்து தமிழ்க்கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு,நவ.5

எதிர்வரும் வாரங்களில் ஏற்படக்கூடிய சீரற்ற காலநிலையைக் கருத்திற்கொண்டு போதியளவு உணவுப்பொருள்களை யாழ். குடாநாட்டிற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசிடம் கோரியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கூட்டுறவு சங்கங்களின் ஊடாக தற்போது ஓரளவிற்கு பொருள்கள் மக்களுக்கு பங்கிடப்பட்டு வழங்கப்படுகின்றபோதும், பொதுமக்கள் ஒரே தடவையில் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

பலவகையான [illegible] தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் விலை உயர்வுக்கு மத்தியில் மக்களால் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இது ஒருபுறம் இருக்க - இனிவரும் வாரங்களில் தொடர்ச்சியான மழை மற்றும் புயல் போன்ற இயற்கைப் புறக்காரணிகளால் குடாநாட்டுக்கு பொருள்களை

(10ஆம் பக்கம் பார்க்க)

## 2,800 மெ.தொன் கோதுமை மா இன்று காங்கேசனுக்கு

திருகோணமலை, நவ.5

குடாநாட்டுக்குத் தேவையான 2,800 மெற்றிக்தொன் கோதுமை மா இன்று திருகோணமலையில் இருந்து கப்பல்மூலம் காங்கேசன் துறைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான அமைச்சின் செயலாளர் எம்.எச். ஜெயசிங்க இதனைத் தெரிவித்தார்.

அடுத்து வரும் வாரங்களில் 7500 மெற்றிக்தொன் உணவுப்பொருள்களை ஏற்றிய இரு கப்பல்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி புறப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# புளியங்கூடலில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

ஊர்காவற்றுறை, நவ.5

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மேற்கில் நேற்று முன்தினம் மாலை குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த அப்பன் என அழைக்கப்படும் குமாரவேலு சுதாகரன் (வயது 33) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

புளியங்கூடல் காட்டு வைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள பற்றைக்குள் இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. (202-16)

# மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.5

யாழ்.ஐயனார் கோயில் வீதியில் உள்ள லங்கா மண்எண்ணெய் நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் ஒக்ரோபர் மாதத்திற்கான மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிறவிற்குட்பட்ட ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101, ஜே/125, ஜே/127, ஜே/128 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே இந்த விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. (203)

# பல்கலை அனுமதிக்கான விண்ணப்ப முடிவு திகதி நவம்பர் 30 வரை நீடிப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

அண்மையில் வெளியான ஜி.[illegible] உயர் தரப்பரீட்சை முடிவுகளின் படி 2006/2007 பல்கலைக்கழக கல்வி ஆண்டுக்கான அனுமதி விண்ணப்பங்கள் அனுப்பும் முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப முடிவு திகதி கடந்த 31ஆம் திகதி முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக அனுமதி கோரி விண்ணப்பிக்க ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் தகுதிபெற்றிருந்தனர்.

இவர்களில் 35ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களே தற்போது விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

இதனையடுத்து விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முடிவு திகதியை எதிர்வரும் 30ஆம் திகதிவரை நீடிக்க முடிவு செய்யப்பட்டதாகவும் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (203)

# பரிசாரகர் பயிற்சியின் நிறைவு வைபவம்

யாழ்ப்பாணம்,நவ.5

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பரிசாரகர் பயிற்சியை மேற்கொண்ட நான்காவது அணியின் பயிற்சி நிறைவு வைபவம் வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை தலைமையில் அண்மையில் வைத்திய சாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பயிற்சியை நிறைவுசெய்தோருக்கான இறுதிப்பரீட்சை விரைவில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டு வைத்தியசாலைகளில் பணியாற்றிய சிற்றூழியர்களிலிருந்து 56 பேர் இப்பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

# வேலணை பிரதேசத்தில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம்,நவ.5

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்தவர்களுக்கே தொடர்ந்து நிவாரணம் மற்றும் ஏனைய நன்மைகள் வழங்கப்படும் என்று பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தெரிவித்துள்ளார்.

இப்பிரிவில் மண்டைதீவு, மண்கும்பான் பகுதிகளில் பங்கீட்டு அட்டைகளுக்கான மீளாய்வு நாளை திங்கட்கிழமை தொடக்கம் 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

ஏனைய பகுதிகளுக்கான மீளாய்வு நேற்றுடன் பூர்த்திசெய்யப்பட்டது.

இனிவரும் காலங்களில் நிவாரணம் உட்பட ஏனைய குறிப்பிட்ட நன்மைகள் பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்தவர்களுக்கே வழங்கப்படும் - என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (1-203)

# வடமராட்சி நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதியின்றி மக்கள் சிரமம்

## அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,நவ.5

குடாநாட்டில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தினால் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது வடமராட்சி பாடசாலைகள் மற்றும் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இன்றி சிரமத்தை எதிர்கொள்வதாக யாழ்.அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கவலை தெரிவித்துள்ளது.

வடமராட்சியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து யாழ்.அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் வடமராட்சி நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

இவ்வாறு நேரடியாக விஜயம் செய்த தம்மிடம் இடம்பெயர்ந்த மக்கள் தமது சோக நிலையை கண்ணீர்மல்க எடுத்து விளக்கினர் என்றும் -

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் சுமார் 30 குடும்பங்களும் - கரவெட்டி சித்தி விநாயகர் பாடசாலையில் சுமார் 77 குடும்பங்களும் - வதிரி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சுமார் 34 குடும்பங்களும் -

கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் சுமார் 50 குடும்பங்களும் - மணியகாரன் தோட்டம் நலன்புரி முகாமில் 30 குடும்பங்களும் - சுடரொளி சனசமூக நிலைய நலன்புரி முகாமில் 55 குடும்பங்களும் - கொற்றாவத்தை அமெரிக்க மிசன் பாடசாலையில் சுமார் 110 குடும்பங்களும் தங்கியுள்ளன என்றும்-

யாழ். அரசசார்பற்ற நிறுவன இணையத்தின் பிரதிநிதிகள் 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

இது விடயமாக.இணையப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்படி இடம்பெயர்ந்த மக்கள் தமது தேவைகள் குறித்து பலரிடம் முறையிட்டுள்ளனர். எனினும் தமக்கு எதுவித உதவியும் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து வசிப்போர் இடநெருக்கடி மற்றும் உணவுப்பற்றாக் குறை, மாணவர்கள் கல்வி கற்பதில் தடங்கல் நிலை, சுகாதார மருத்துவ வசதிகளின்மை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

பல குடும்பத்தினர் காலை வேளை உணவை உட்கொள்ளமுடியாமல் தவிக்கின்றனர். தற்போது மழைகாலம் என்பதால் நலன்புரிமுகாம்களுக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் மக்கள் குறிப்பாக குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பல குடும்பங்களுக்கு 4ஆம் கட்ட உணவு விநியோகம் வழங்கப்படவில்லை.

தற்போது நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாலும் சுகாதாரக் குறைபாடுகளினாலும் தொற்றுநோய்கள் பரவக்கூடிய வாய்ப்புண்டு. இது குறித்து பல அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பாராமுகமாகவே இருக்கின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் உதயனுக்குத் தெரிவித்தனர். (79)



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோர் நேற்று தமிழகத்துக்கு விஜயம் செய்தனர். காஞ்சிபுரம் ஓரகடம் என்ற இடத்தில் இடம்பெற்ற தேசிய வாகன ஆராய்ச்சி மையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே இவர்கள் தமிழகத்துக்கு வருகைதந்தனர். இது தொடர்பான நிகழ்வில் அவர்கள் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம் இது. தமிழக ஆளுநர் பர்னாலாவும் படத்தில் காணப்படுகிறார்.

# கைதான 5 இளைஞர்களும் மருத்துவ பரிசோதனைக்கு!

## மல்லாகம் நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம்,நவ.5

குடாநாட்டில் கடந்த சில தினங்களில் சீருடையினரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து இளைஞர்களையும் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலைப்படுத்தி மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கும்படி மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிவசுப்பிரமணியம் தர்மேந்திரா(வயது 25 - யாழ். பிறவுண் வீதி), சிவானந்தம் சிறிதரன்(வயது 30 - கொக்குவில் மேற்கு), நடராஜா நர்மதன்(வயது 20 - சுன்னாகம் கிழக்கு), திருஞானசம்பந்தர் ரமணன்(வயது 23 - இணுவில் மேற்கு), பாஸ்கரன் பிரதாப் (வயது 23 - இணுவில் மேற்கு) ஆகியோர் தொடர்பிலேயே மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

பிரஸ்தாப ஐந்து இளைஞர்களும் மல்லாகம் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை யாழ்.சட்டவைத்திய அதிகாரி முன்னிலைப்படுத்தி மருத்துவ அறிகைை சமர்ப்பிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இவர்கள் தற்சமயம் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் தடுப்புக் காவல் உத்தரவு கிடைத்த பின்னரே மேலதிக விசாரணைக்கு கொழும்புக்குக் கொண்டு செல்லமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

# குடாக்கடலூடாக குருநகர் வந்தோரின் இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டது

குருநகர்,நவ.5

வன்னியில் இருந்து குடாக்கடலூடாக குருநகர் இறங்குதுறைக்கு வருகை தந்த கடற்றொழிலாளர் மற்றும் பொதுமக்களது இரத்தம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினர் குருநகர் பகுதிக்கு நேரில் விஜயம் செய்து இரத்தப் பரிசோதனையை மேற்கொண்டனர்.

சம்பந்தப்பட்ட பொதுமக்கள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு நோய்க்கிருமிகளின் தாக்கம் எது[illegible] ஏற்பட்டுள்ளதா என்பதை அறிவதற்காக இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் வன்னியிலிருந்து எவரும் நேற்றையதினம் குடாக்கடலினூடாக குருநகர் இறங்குதுறைக்கு வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (51)

# குறைந்த வருமானம் பெறும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உலர் உணவுப் பொருள்

## கரவெட்டியில் வைத்து விநியோகம்

வடமராட்சி,நவ.5

வடமராட்சிப் பிரதேசத்தில் குறைந்த வருமானத்தைப் பெறும் முன்பள்ளி ஆசிரியர்கள் சுமார் 200 பேருக்கு அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருள்கள் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

உலக தரிசனம் நிறுவனம் இந்த நிவாரணத்தை வழங்கிவருகிறது.

குறிப்பிட்ட பகுதி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்[illegible] கரவெட்டி பிரதேச சபையில் வைத்து இப்பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு ஏற்கனவே அரிசி வழங்கப்பட்டுவிட்டது என்றும் -

சீனி, பருப்பு போன்ற பொருள்கள் சில தினங்களுக்கு முன்னர் வந்துசேர்ந்துள்ளதால் இரண்டொரு தினங்களில் அவை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தவேளை, வல்வெட்டித்துறை நகர [illegible]பகுதியில் பணிபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

# 'சம்பந்தன் விருது' வழங்கல் இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,நவ.5

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக வழங்கப்படும் 'சம்பந்தன் விருது' வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா இந்த ஆண்டுக்கான விருதினைப் பெறுகின்றார்.

# எரிபொருள் நிலையங்களில் நேற்று நீண்ட 'கியூ'

வடமராட்சி,நவ.5

பங்கீட்டுக்கான இரண்டாம் கட்ட எரிபொருள் பெறுவதற்காக குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்கள் முன்பாக நீண்ட வரிசை நேற்றுக் காணப்பட்டது.

பெருந்தொகையான மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளைப் பெற்றுக்கொண்டனர்.

# பிரதேச சபை செயலர் நியமனத்துக்கு விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

உள்ளூராட்சி சபைகளில் முகாமைத்துவ உதவியாளர் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை பிரதேச சபைகளின் செயலாளர்களாக நியமிக்க உள்ளூராட்சித் திணைக்களத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேச சபைகளின் செயலாளர்களாக கடமையாற்ற விரும்பும் உத்தியோகத்தர்களின் விவரங்களையும் எந்தப் பிரததேச சபையில் கடமையாற்ற விரும்புகிறார் என்ற விவரத்தையும் அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் இணைந்த சேவைகள் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் முகாமைத்து உதவியாளர் தரம் I இல் கடமையாற்றி வருவதும் -

இணைந்த சேவை தரங்களில் எழுதுநர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, சிறாப்பர் சேவை, களஞ்சியப் பொறுப்பாளர் சேவை ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவைகளுக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# பாதுகாப்புக்கு பங்கம் நிகழாவண்ணம்...!

அரசாங்கத்தின் - அதன் இராணுவத்தின் - கட்டுப்பாட்டுப் பிரதேசமாக விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் ஆறுலட்சத்து ஐம்பத்துமூவாயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து மக்களின் பெரும் மனிதப் பேரவலம் - மனிதாபிமானப் பிரச்சினை - குறித்து ஏற்கனவே பல தடவைகள் இப்பத்தியில் எழுதி உள்ளோம்.

ஒரு மனிதனின் உயிர் இயக்கத்துக்கு ஆதாரமாக - இன்றி அமையாததாக - விளங்குவது உணவு. அவரவர் வயதுக்கு ஏற்ப, நிர்ணயிக்கப்பட்ட அளவு கலோரியை விளைக்கப் போதுமான உணவை ஒருவர் நாளாந்தம் உட்கொள்ளுவது மிக அவசியம். அதற்குப் போதுமான அத்தியாவசிய உணவுப் பொருள்களைச் சாப்பிடாவிடில் அவர் பட்டினி நிலையில் உள்ளதாகவே கருதப்படுவார்.

அந்த நிலை தொடர்ந்தால், சம்பந்தப்பட்டவர் நோய்க்கு ஆளாகலாம்; அது நீடிப்பின் அவர் இறந்து போகும் சாத்தியம் உண்டு.

ஆகவே போதிய உணவுப் பொருள் கிடைக்காமை என்பது மக்களின் உயிர்ப்பிரச்சினை. முழுக்க முழுக்க ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. ஆகையால் மக்களுக்குப் போதியளவு உணவுப்பொருள்கள் கிடைப்பதற்கு வசதி செய்வது அரசாங்கத்தின் தட்டிக்கழிக்கமுடியாத பிரதான கடமை.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரதான போக்குவரத்துப் பாதையான ஏ-9 வீதி கடந்த மூன்றரை மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ளது. அதன் விளைவு இங்குள்ள 1,88,266 குடும்பங்கள், உணவுப் பொருள்களும் ஏனைய பொருள்களும் போதிய அளவில் கிடைக்காமையால் அவலமுறுகின்றன.

தரை வழியாக உணவுப் பொருள்களைக் கொண்டுவருவதற்குப் பதிலாக, கடல் வழியாக அவற்றைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் மாற்று ஏற்பாடு செய்கிறது. உண்மைதான்.

ஆனால், அத்தியாவசிய உணவுப்பொருள்களேனும் போதிய அளவில் எடுத்துவரப்படுகின்றனவா? மக்கள் தாம் விரும்பிய பொருள்களை விரும்பிய இடத்தில், விரும்பிய நேரத்தில் பெறக்கூடியதாக உள்ளதா? இல்லவே இல்லை!

நிலைமை இவ்வாறு சீரழிந்துபோயிருக்க -

எப்போதும் போலவே, கொழும்பில் குடிகொண்டுள்ள அரச அமைச்சர்களும், அரசாங்க அதிகாரிகளும் வேண்டிய அளவில் உணவுப்பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவதாகத் தம்பட்டம் அடிக்கிறார்கள். குடாநாட்டு மக்கள் பேரவலப்படவில்லை; அவர்களுக்கு கஷ்டம் எதனையும் அரசாங்கம் விளைவிக்கவில்லை என்று சர்வதேசத்துக்குப் 'படம்போட்டு' காட்ட முனைகிறார்கள்.

ஆனால், யாழ்.அரசாங்க அதிபர் வெள்ளியன்று விடுத்த அறிக்கை, குடாநாட்டுக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் மக்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்குப் போதுமானதாக இல்லை என்பதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

அதனால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் வரிசை வரிசையாக நின்று பொருள்களை வாங்கும் நிலைமையையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

உணவுப்பொருள்களைப் பெறுவதற்காக, வயிற்றுப் பசியைப் போக்குவதற்காக, நாளாந்த வருமானம் தரும் தமது தொழில்களுக்கும் செல்லாமல் மக்கள் அன்றாடம் அலைகிறார்கள் என்பதும் இன்னொரு பேரிடர். இதனால் ஒட்டுமொத்தத்தில் யாழ்.மாவட்ட மக்களின் மிகப்பெறுமதியான மனித சக்தி விரயமாக்கப்படுகிறது.

இன்னும் எத்தனை காலத்துக்கு - மாதங்களுக்கு - குடாநாட்டு மக்களை எல்லா வகைகளாலும் பேரவலத்தை, மனித அவலத்தை அனுபவிக்க வைக்கப்போகிறது அரசு?

அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் - யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் - ஆறு லட்சத்துக்கும் அதிகமான மனித உயிர்கள், அந்த உயிர்களைக் காப்பற்றிக்கொள்ள முடியுமா என்று அந்தரிக்கும் மனிதாபிமான விவகாரத்தை விடவும் -

நாட்டின் பாதுகாப்பு நிலைமை குழம்பாமல், பங்கப்படாமல், பாதிப்புறாமல், சீராக இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியமானது; முதன்மையானது!

தம்மோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவரிடம், நாட்டை ஆளும் அரசின் தலைவரான ஜனாதிபதி கூறிய 'பவித்திரமான' நிலைப்பாடு இது!

ஏ-9 பாதயைத் திறப்பதால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடாது. அவ்வாறு நிகழாவண்ணம் பாதைய எவ்வாறு திறப்பது என்பது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் ஜனாதிபதி!

பாதுகாப்புக்குப் பங்கம் நிகழாமல் இருப்பது என்று ஜனாதிபதி எதனைக் கருதுகிறார் அல்லது கூறுகிறார்?

ஏ-9 பாதையின், முகமாலை முன்னரங்கப் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் அரச தரப்பு பெரும் பின்னடைவைக் கண்டது. இதனை நாம் மட்டும் சொல்லவில்லை. தலைநகரில் உள்ள இராணுவ ஆய்வாளர்களும் கூறியுள்ளார்கள்.

அரச தரப்புக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து ஆங்கிலப் பத்திரிகைகளில் மட்டுமன்றி சிங்களப் பத்திரிகைகளிலும் ஆய்வாளர்கள் பிய்த்து வாங்கி எழுதி உள்ளார்கள்.

முகமாலைத் தோல்வியை ஈடுசெய்து இழந்த இராணுவ சமநிலையை மீட்டெடுக்கவேண்டும் என்பதே -

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து நிகழாத வண்ணம் பாதையைத் திறப்பது என்பதன் அர்த்தமா?

முகமாலையில் அரச தரப்பு மீண்டும் ஒரு பெரும் தாக்குதலை செய்த பின்னரே ஏ-9 பாதை திறக்கப்படும் என்பதை ஜனாதிபதி சைகை மொழியில் கூறியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது?

அதாவது -

தமிழ் மக்களின் உயிரோடு சம்பந்தப்பட்ட மனிதாபிமானப் பிரச்சினைக்கு அன்றி, நாட்டின் பாதுகாப்புக்கு பங்கம் நிகழாதிருப்பதற்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

குடாநாட்டு மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் ஒரு கட்டமைப்பை - தரைவழிப்போக்குவரத்து வசதியை - ஜனநாயக அரசு ஒன்று தடுத்து வைப்பது எந்த வகையில் நியாயம்? சர்வதேச நடைமுறைகளுக்கு இந்த நியாயம் ஒவ்வுதல் ஆகுமா?

இதேவகை மனிதப்பேரவலம் சிங்களப் பிரதேசங்களில் உருவாகி இருப்பின், மஹிந்த அரசு பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படக்கூடாது என்பதற்காக உணவுப்பொருள்கள் கொண்டு வரப்படுவதற்கு உள்ள பெரும் வீதியை மூடி வைக்குமா?

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 410 வைத்தியர்களுக்கு வெற்றிடங்கள்

## அவற்றை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,நவ.5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் 410 வைத்தியர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த வைத்தியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பொதுச்சேவை ஆணைக்குழு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விசேட வைத்திய அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள்/உதவி வைத்திய அதிகாரிகள் ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த வெற்றிடங்களில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 97 வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

விசேட வைத்திய அதிகாரி பதவியில் 16 வெற்றிடங்களும், வைத்திய அதிகாரி பதவியில் 81 வெற்றிடங்களும் யாழ். மாவட்டத்தில் நிலவுகின்றன.

தகுதியானவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணசபை, இல.35, எம்.சி.ஹெய்ஸர் றோட், ஒசில் திருகோணமலை' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-203)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.5

போயா தினத்தை முன்னிட்டு பாக்யா இசைப்பயிலகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பயிலகத்தில் சுய முன்னேற்ற தன்னம்பிக்கைச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் சொற்பொழிவாற்றவுள்ளார். (202)

## கட்டட வளை முறிந்து வீழ்ந்தது மாணவர் மயிரிழையில் தப்பினர்

வடமராட்சி,நவ.5

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கான வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வகுப்பறைக் கட்டடத்தின் குறுக்கு வளை திடீரென முறிந்து வீழ்ந்தது. இதன்போது வகுப்பறையில் இருந்த ஆசிரியையும் மாணவர்களும் தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது மாணவர்கள் இருமருங்காக அமர்ந்திருக்க, நேர் நடுவே ஆசிரியை கற்பித்துக்கொண்டிருந்தார்.

முறிந்த வளை மரம் நடுவே வீழ்ந்தமையால் மாணவர்களும் ஆசிரியையும் மயிரிழையில் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-173)

# இரு மண்டபங்களில் இன்று வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.5

தமிழ் மாணவர் ஒன்றியத்தால் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நடத்தப்பட்டுவரும் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று இரு மண்டபங்களில் நடத்தப்படவுள்ளன.

மாணவர்களின் வரவு அதிகரித்துள்ளமையால் ஒரு மண்டபத்தில் கருத்தரங்கை நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வீரசிங்கம் மண்டபம், வேம்படி மகளிர் கல்லூர் ஆகிய இரு இடங்களிலும் இன்று கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இன்று கணித பாடத்திற்கான வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.(1-203)

## மகிழ்களம் கண்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.5

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் ஆக்கத் திறனை வெளிப்படுத்தும் மகிழ்களம் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணிவரை கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (202)

# குடாநாட்டில் சுமுகமாக நடந்த ஐந்தாம் தர விசேட பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.5

ஐந்தாம் தர விசேட புலமைப்பரிசில் பரீட்சை நேற்று குடாநாட்டில் சுமுகமாக நடைபெற்றது. பரீட்சையில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி நாடு முழுவதும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் நடத்துவதென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் கடந்த ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் யாழ். மாவட்டம் உட்பட 3 மாவட்டங்களில் இப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த மூன்று மாவட்டங்களுக்கும் விசேட பரீட்சை நேற்று நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 84 நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பரீட்சை நிலையங்களுக்கு நேரில் சென்று கண்காணித்தனர்.

பரீட்சைக்கு மாணவர்களை அழைத்து வந்த பெற்றோர்கள் பரீட்சை முடியும் வரை காத்திருந்து அவர்களை அழைத்துச் சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (202-111-79-173)



நேற்று நடைபெற்ற 5ஆம் தர விசேட புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியபோது....

# இரு இளைஞர்களைக்காணவில்லை என முறைப்பாடு

கல்வியங்காடு,நவ.5

குடாநாட்டில் இருவர் காணாமற் போயுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி அராலி வடக்கு செட்டியார்மடத்தடியைச் சேர்ந்த நடராஜா சற்குணராசா (வயது28) என்பவர் அன்றையதினம் இரவு 7 மணியளவில் வீட்டுக்கு அருகில் வீதியில் நின்று நண்பர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தபோது சீருடையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அவரது உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

அதேவேளை, வடமராட்சி இமையாணன் கிழக்கு, கேணியடியைச் சேர்ந்த ஜீவன் ஜெகநாத் (வயது18) என்பவரைக் கடந்த மாதம் 27ஆம் திகதியிலிருந்து காணவில்லை என உறவினர்களால் முறையிடப்பட்டுள்ளது. இவர் கடந்த மாதம் 27ஆம் திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் செல்வதாகச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரது உறவினர் முறைப்பாடு செய்துள்ளனர் என யாழ். மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (1-79)

## வடமராட்சியில் பாண் தாராளம்

பேக்கரிகளுக்கு ஒருவார காலத்துக்குத் தேவையான மா வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியில் பாண் தாராளமாகத் தற்போது கிடைத்துவருகிறது. நான்காம் கட்டப் பங்கீட்டுப் பொருள்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில் அப்பொருள்களை உணவுக்காக நுகர்வோர் பயன்படுத்துவதால் பாண் பெறுவதில் இருந்துவந்த நெருக்கடி கடந்த இரு நாள்களாகக் குறைவடைந்துள்ளது. (173)

## நாளை

ஐப்பசி 20
திங்கட்கிழமை
06.11.2006
திதி : பிரதமை
பிற்பகல் : 05.17
நட்சத்திரம் : பரணி
முற்பகல் : 08.35
கார்த்திகை விருதம்
சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம் : 07.35 - 09.05

# போசாக்கற்ற மாணவர்களுக்கு 'விற்றமின்' வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள், முன்பள்ளி சிறுவர்கள் ஆகியோருக்கான 'விற்றமின் A' போசாக்குத் திட்டம் ஒன்றைச் சுகாதார சேவைகள் பணிமனையினர் நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

குடாநாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக பாடசாலை, முன்பள்ளிச் சிறார்களின் போசாக்கு நலிவடைய அதிக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை, முன்பள்ளிச் சிறுவர்களுக்கு 'விற்றமின் A' மெகாடோஸ் வில்லை ஒன்று வழங்கப்படவுள்ளது.

இவ்வில்லை சிறுவர்களுக்கு ஆறு மாதத்திற்குத்தேவையான 'விற்றமின் A' யைக் கொண்டிருக்கும்.

இத்திட்டத்தின்கீழ் சிறார்களுக்கு 'விற்றமின் A' வில்லைகள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேரடியாக அமுல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தைச் சுகாதார வைத்திய அதிகாரிகள் ஒருங்கிணைக்கவுள்ளனர்.

இதற்கு சகல பாடசாலை அதிபர்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NORTH EAST PROVINCIAL COUNCIL
# VACANCIES FOR SPECIALIST MEDICAL OFFICERS/ MEDICAL OFFICERS AND REGISTERED MEDICAL OFFICERS / ASSISTANT MEDICAL OFFICERS

Applications are invited from those in appropriate services and from those retired from service and also from fresh candidates with eligible qualifications to fill the vacancies in the medical institutions of the North East Provincial Council as appear in the schedule below.

Conditions of service will be that normally applicable to, in public service.

Officers who are already in service in North East Province shall not apply.

Officers serving in the Central and other Provincial Medical Institutions should apply through their Heads of Department giving their service particulars and other relevant details.

In the case of those who have retired and fresh candidates should forward their applications direct to the undersigned giving necessary particulars. Those in retirement, their terms of re-employment will be for one year subject to renewal. For fresh candidate with eligible qualifications appointment will be on contract basis for one year subject to renewal upon satisfactory performance and availability of vacancies.

Salary payable will be in accordance with the P.A Circulars and regulations as prescribed in the Establishment Code.

Applications are advised to indicate the stations preferred to serve in the order of priority.

Application should reach the "Secretary, Provincial Public Service Commission, North East Province, No. 35, Mc Keyzer Road, Orr's Hill, Trincomalee" on or before 30.11.2006. The top left hand corner of the envelop containing the application should indicate the post applied for.

## SCHEDULE

### 01. Specialist Medical Officers.

| Post | D.P.D.H.S Region | Station | Vacancies |
|---|---|---|---|
| 01. Specialist Medical Officers | i. Vavuniya | G.H, Vavuniya | 12 |
| | ii. Mannar | G.H, Mannar | 15 |
| | iii. Ampara | D.H, Maha-oya | 07 |
| | iv. Kalmunai | Eluwattuwan / Akkaraipattu | 06 |
| | v. Batticaloa | B.H, Valaichenai | 08 |
| | vi. Trincomalee | G.H, Trincomalee | 11 |
| | | B.H, Kantale | 06 |
| | vii. Jaffna | G.H, Point Pedro | 14 |
| | | D.H, Tellipalai | 02 |

### 02. Medical Officers

| Post | D.P.D.H.S Region | Station | Vacancies |
|---|---|---|---|
| 02. Medical Officers | i. Vavuniya | G.H, Vavuniya | 15 |
| | | P.U, Nedunkerny | 01 |
| | | D.H, Cheddikulam | 01 |
| | ii. Mannar | G.H, Mannar | 18 |
| | | D.H, Adampan | 02 |
| | | D.H, Talalimannar | 03 |
| | | P.U, Pesalai | 01 |
| | iii. Kilinochchi | PU, Akkarayankulam | 01 |
| | | PU, Pallai | 01 |
| | | Respiratory Clinic | 01 |
| | iv. Mullaitivu | D.H, Mullaitivu | 03 |
| | | P.U, Mallavi | 02 |
| | | R.H, Puthukudiyiruppu | 01 |
| | v. Ampara | D.H, Maha Oya | 14 |
| | vi. Batticaloa | B.H, Valaichchenai | 27 |
| | | B.H, Eravur | 01 |
| | | P.U, Vakarai | 01 |
| | | Mental Health Unit/Bco | 02 |
| | vii.Trincomalee | G.H, Trincomalee | 19 |
| | | B.H, Kantale | 24 |
| | | PU, Thampalagamam | 01 |
| | | R.H, Kuchchavely | 01 |
| | | R.H, Serunuwara | 01 |
| | viii.Jaffna | G.H, Point Pedro | 49 |
| | | D.H, Chavakachcheri | 02 |
| | | D.H, Delft | 02 |
| | | D.H, Kayts | 03 |
| | | D.H, Punkudutivu | 02 |
| | | D.H, Tellipalai | 11 |
| | | D.H, Valvettithurai | 03 |
| | | P.U, Analaitivu | 01 |
| | | P.U, Chankanai | 01 |
| | | P.U, Karainagar | 02 |
| | | P.U, Kopay | 02 |
| | | P.U, Nainativu | 01 |
| | | R.J, Maruthankerny | 01 |
| | | STD Control, Point Pedro | 01 |

### 03. Registered Medical Officers / Assistant Medical Officers

| Post | D.P.D.H.S Region | Station | Vacancies |
|---|---|---|---|
| 03. Registered Medical Officers / Assistant Medical Officers | i. Vavuniya | P.U, Nedunkerny | 02 |
| | | D.H, Cheddikulam | 02 |
| | | CD&MH, Poovarasankulam | 01 |
| | | C.D, Sithamparapuram | 01 |
| | | C.D, Neriyankulam | 01 |
| | | C.D, Puliyankulam | 01 |
| | ii. Mannar | G.H, Mannar | 01 |
| | | D.H, Adampan | 02 |
| | | D.H, Talaimannar | 01 |
| | | D.H, Murungan | 02 |
| | | P.U, Pesalai | 03 |
| | | R.H, Chilawathurai | 02 |
| | | R.H, Vidathaltivu | 02 |
| | | C.D, Irunailupakulam | 01 |
| | | C.D, Muruchchukaddy | 01 |
| | | C.D, Thirukketheeswaram | 01 |
| | | C.D, Vaellakulam | 01 |
| | | C.D, Periyamadu | 01 |
| | | C.D, Periyapanndivirichchi | 01 |
| | | C.D, Vankalai | 01 |
| | ii. Mullaitivu | D.H, Mullaitivu | 01 |
| | | P.U, Mallavi | 01 |
| | | R.H, Puthukudiyiruppu | 01 |
| | | C.D & M.H, Mulliyawalai | 01 |
| | | C.D, Alampil | 01 |
| | | C.D, Oddsuddan | 01 |
| | | C.D, Vannarikulam | 01 |
| | iv. Ampara | B.H, Dehiyattakandiya | 02 |
| | | D.H, Maha Oya | 01 |
| | | P.U, Pathiyattalawa | 02 |
| | | R.H, Wadinawala | 02 |
| | | C.D & M.H, Lahugala | 01 |
| | | C.D & M.H, Thoddarna | 01 |
| | | C.D & M.H, Panama | 01 |
| | | C.D, Mahawalanda | 01 |
| | | C.D, Namal Oya | 01 |
| | | C.D, Sandunpura | 01 |
| | | C.D, Sripura | 01 |
| | | C.D, Weharagala | 01 |
| | | C.D, Deegawanpiya | 01 |
| | | C.D, Koknagara | 01 |
| | | C.D, Mawanawela | 01 |
| | v. Batticaloa | B.H, Valaichchenai | 02 |
| | | B.H, Eravur | 02 |
| | | B.H, Kallar | 01 |
| | | P.U, Vakarai | 02 |
| | | R.H, Chenkalady | 01 |
| | | R.H, Mandapathady | 01 |
| | | C.D & M.H, Navatkadu | 01 |
| | | C.D, Bakkeila | 01 |
| | | C.D, Kathiravely | 01 |
| | | C.D, Mahilavettuwan | 01 |
| | | C.D, Mankerny | 01 |
| | | C.D, Periyapullumalai | 01 |
| | | C.D, Cheddipalayam | 01 |
| | | C.D, Thuraineelavanai | 01 |
| | | C.D, Unnichchai | 01 |
| | vi. Trincomalee | B.H, Kantale | 02 |
| | | D.H, Mutur | 02 |
| | | D.H, Kinniya | 02 |
| | | P.U, Padavi Sripura | 02 |
| | | P.U, Thampalagamam | 02 |
| | | P.U, Pulmoddai | 01 |
| | | R.H, Gomarankadawela | 02 |
| | | R.H, Kucchavely | 01 |
| | | R.H, Serunuwara | 01 |
| | | R.H, Nilavey | 01 |
| | | C.D & M.H, Morawewa | 01 |
| | | C.D, Echchalampattu | 01 |
| | | C.D, Kurinchakkerny | 01 |
| | | C.D, Wan Ela | 01 |
| | | C.D, Kachchikodithevu | 01 |
| | vii.Kalmunai | B.H, Eluwattuwan | 02 |
| | | D.H, Akkaraipattu | 02 |
| | | D.H, Pottuvil | 01 |
| | | D.H, Thirukkovil | 01 |
| | | P.U, Central Camp | 02 |
| | | P.U, Karaitivu | 01 |
| | | P.U, Palamunai | 01 |
| | | R.H, Addalaichchenai | 01 |
| | | C.D&M.H, Periyaneelavanai | 01 |
| | | C.D, Annamalai | 01 |
| | | C.D, Komari | 01 |
| | | C.D, Sorikalmunai | 01 |

**V.P.Balasingham,**
**Secretary,**
**Provincial Public Service Commission,**
**North East Province,**
**Trincomalee.**

(C/51272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகள், தாக்குதல்கள் மூலம் தமிழர்களை அச்சுறுத்தி அவர்களை அடிமைப்படுத்த முனைகிறது அரசாங்கம்

## மனித உரிமை மீறல் பிரச்சினைகளை விவரித்து தமிழ்க்கூட்டமைப்பு ஐ.நாவுக்கு மகஜர்

**தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் மனித உரிமை மீறல் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நாவுக்கு விரிவான மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது. அந்த மகஜரின் முழு விவரமும் இங்கு வெளியிடப்படுகிறது.**

தமிழ்பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடமான வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களால் நாடாளுமன்றிற்குத் தெரிவு செய்யப்பட்ட அவர்களின் பிரதி நிதிகள் என்ற வகையில் இந்த நீண்ட மகஜரை நாம் உங்களிடம் சமர்ப்பிக்கிறோம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களால் அளிக்கப்பட்ட வாக்குகளின்படி போட்டிக்காக நிறுத்தப்பட்ட 23 வேட்பாளர்களில் இருந்து 22 பேர் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் நாம்.

தற்போது வடக்கு-கிழக்கில் அதிகளவான மனித உரிமை மீறல் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளதால் - அவை அவசரமாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியுள்ளதால் அவற்றை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

### அரச படை நடவடிக்கையில் சிவிலியன்கள் புறக்கணிப்பு

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையால் அங்குள்ள தமிழ் பேசும் மக்களின் உயிரும் உடைமையும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குப் பாரிய தொடர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மனித உரிமைகளைக் கண்காணிக்கும் உள்ளூர் அமைப்புகளின் அறிக்கையின்படி, இவ்வருடத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்பேசும் மக்கள் அரச படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். பெருமளவான தமிழ் சிவிலியன்கள் காயப்படுத்தப்பட்டுள்ளனர். அநேகமாக 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இருந்து நாலாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் சிவிலியன்கள் காயமடைந்துள்ளனர். அதாவது ஊனமாக்கப்பட்டுள்ளனர்.

அரச படையினர் மேற்கொண்ட பாரிய தொடர் தாக்குதல்கள் மூலம் வீடுகள், கடைகள், வாகனங்கள், தொழில் இடங்கள் மற்றும் ஏனைய சொந்த - தனிப்பட்ட உடைமைகள் போன்ற பொதுமக்களின் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தாக்குதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த சிவிலியன்கள் மீண்டும் அவர்களது வாழ்விடங்களுக்கு மீள்குடியேற முடியாதவாறு தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வடக்கு - கிழக்கில் முழு நிலத்தையும் ஆக்கிரமித்து அந்நிலத்தை முற்றாக அழித்தொழிக்கும் கொள்கை ஒன்றை இலங்கை அரசு நிறைவேற்றி வருகின்றது.

இதன் காரணமாக தற்போது இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் சிவிலியன்கள் உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ளனர். 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கடல் மார்க்கமாக தென்இந்தியாவுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இது ஏற்கனவே ஏற்பட்ட யுத்தம் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தம் போன்றவற்றால் இடம்பெயர்ந்த 8 லட்சம் பேருக்கு மேலதிகமான தொகையாகும்.

தற்போது இலங்கை அரசு பாரபட்சமான முறையில் தமிழர்கள் வாழும் பகுதிகள் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களையும் ஷெல், மோட்டார்குண்டு மற்றும் ஆட்லறித் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றது. இவை தொடர் நிகழ்வாகிவிட்டன.

இவ்வாறான தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு நாமும் ஏனைய சிவில் அமைப்புகளும் தொடர்ச்சியாக இலங்கை அரசைக் கேட்டுவருகின்றபோதிலும் அவ்வேண்டுகோள்களை அரசு காதில் வாங்குவதாக இல்லை. அவ்வேண்டுகோளைப் புறக்கணித்து தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டேவருகின்றது.

இலங்கை அரசு இவ்வாறு தொடர் தாக்குதல்களை மேற்கொள்வதன் நோக்கம் தமிழ் மக்களுக்கு அதிக துன்பங்களையும், தீங்குகளையும் ஏற்படுத்துவது தான் என்று மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறான தாக்குதல்களை நிறுத்தித் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சர்வதேச சமூகங்களினால் இலங்கை அரசிற்கு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபோதிலும் அவ்வேண்டுகோள்கள் அரசால் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

இது தொடர்பாக சர்வதேச சமூகங்களினால் தெரிவிக்கப்பட்ட அக்கறை மற்றும் தமிழ் மக்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் அத்தனையையும் இலங்கை அரசு முற்றாக நிராகரித்துவிட்டது.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்டுவரும் இவ்வாறான இராணுவ நடவடிக்கையானது சர்வதேச மனித உரிமை சட்டத்தை மீறுவதாகவும், ஜெனிவாப் பேச்சில் ஒத்துக்கொள்ளப்பட்ட தமிழ் மக்களை இராணுவ நடவடிக்கையிலிருந்து பாதுகாத்தல் - அவர்களின் பாதுகாப்பை முழுமையாக உறுதிப்படுத்துதல் போன்ற விடயத்திற்கு முரணானதாகவும் அமைந்துள்ளது.

### நீதிக்குப் புறம்பான கொலைகள், அதன் விளைவுகள் மற்றும் அலட்சியம்

ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதகுருமார்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவகர்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள், மாணவர்கள், சிறுவர்கள், புனிதத் தலங்களில் தஞ்சம் புகுந்த அகதிகள் மற்றும் ஏனைய சிவிலியன்கள் ஆகியோர் அரச படையினராலும் அவர்களின் ஆதரவுடன் இயங்கும் ஒட்டுப்படையினராலும் கொல்லப்பட்டனர்.

அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக சேவகர்கள் ஆகியோர் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதன் நோக்கம், அவர்களை அச்சுறுத்தி அவர்களின் குரல் வளையை நசுக்கி, அரசால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை வெளிக்கொண்டு வராமல் தடுப்பதும் அவர்கள் சட்டரீதியான அரசியலில் ஈடுபடுவதை நிறுத்துவதும்தான்.

இவ்வாறான நீதிக்குப் புறம்பான கொலைகளை மேற்கொண்டு வரும் அரச படையினர் மற்றும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படையினர் ஆகியோருக்குக் கடிவாளம் இடுவதற்கு அரசு விரும்பாமல் அல்லது அரசால் முடியாமல் உள்ளது.

அதிகமான தமிழ் பெண்களும் அரச படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்தால் அவர்களின் உயிருக்குப் பேராபத்து ஏற்படும் என்றொரு அச்ச உணர்வை அரச படையினர் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளனர். இலங்கை அரசு தமிழர்களை அச்சுறுத்தி அவர்களை அடிமைப்படுத்திவைக்கும் திட்டத்திலேயே செயற்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இந்த விடயங்களை நாம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோதிலும் குற்றவாளிகளில் ஒருவரையேனும் அரசு கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்தவில்லை. நீதிக்குப் புறம்பான கொலைகளை அரசு மேற்கொண்டுவருகின்றது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும்.

அரச படையினர் மிகவும் நேர்மையற்ற முறையில் நடந்துகொள்கின்றனர். தமிழர்களுக்கு எதிராக படையினர் செயற்படும் வண்ணம் இலங்கை அரசு அவர்களுக்கு முழு அனுமதியையும் வழங்கியுள்ளது. தமிழர்களை இவ்வாறு வேண்டுமென்றே கொலைசெய்வது இடைவிடாது தொடர்ந்த வண்ணமேதான் உள்ளது.

திருமலை மாவட்டத்தில் தமிழர்கள் தாக்கப்படுவதும், அவர்களது வாழ்விடங்கள் மற்றும் தொழில்நிலையங்கள் போன்றவை தாக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து தமிழர்களை முற்றாக விரட்டியடிப்பதற்கான நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எடுத்துக்கூறி இந்நடவடிக்கைகளை நிறுத்துமாறு அவரை வேண்டினோம். ஆனால், அதற்கான நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை. ஆனால், தாக்குதல்கள் தொடர்கின்றன.

திருகோணமலை மாவட்டத்திற்கு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டமையானது எதிர்பாராமல் நடந்த ஒரு நிகழ்ச்சியல்ல. அவ்வாறான நியமனம் இடம்பெற்றது இதுதான் முதல் தடவை. இந்த நியமனம் மூலம் தமிழர்களுக்கு எதிரான கொள்கை திருமலையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

99 வீதம் சிங்களவர்களைக் கொண்ட அரச படையினர் தமிழர்களுக்கு எதிராகவே செயற்படுகின்றனர். தமிழர்கள் அரச படையினரை ஆக்கிரமிப்புப் படையினராகவே பார்க்கின்றனர். தமிழர்களின் படுகொலை தொடரும் என அஞ்சும் அளவிற்குப் படையினரின் ஆக்கிரமிப்பு அமைந்துள்ளது.

95 வீதமான சிங்களவர்களைக் கொண்ட பொலிஸாரும் தமிழர்களுக்கு எதிராகவே செயற்படுகின்றனர். அவர்கள் தமிழர்களைப் பாதுகாக்கவோ தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் பற்றி விசாரணைகளை நடத்தவோ நடவடிக்கை எடுப்பதில்லை. இந்தக் குற்றச் செயல்களைப் பொலிஸாரும் படையினருடன் சேர்ந்து செய்கின்றனர் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

### சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களைத் தடுத்தல்

வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களை அங்கு போகவிடாமல் அரச படையினர் தொடர்ந்தும் தடுத்து வருகின்றனர். சில சந்தர்ப்பங்களில் இந்த நிறுவனங்களின் ஊழியர்கள் படையினராலும், ஒட்டுப்படையினராலும் தாக்கப்படுகின்றனர்; வாகனங்களும் தாக்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மனிதாபிமான வசதிகள் எதுவும் சென்றடையக்கூடாது என்பதற்காகவே இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்யவிடாமல் இந்த அமைப்புகளை விரட்டியடிப்பது அரசின் நிபந்தனைகளுக்கு இவ்வமைப்புகளை அடிபணிய வைப்பதுமே அரசின் திட்டம்.

சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் தேசிய பாதுகாப்புக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டோ அல்லது மேலதிக விளக்கங்களோ இல்லாமல் அவர்கள் இலங்கையில் வேலை செய்வதற்கான அனுமதியும் விஸா நீடிப்பும் அரசால் மறுக்கப்படுகின்றது.

அரச படையினர் மேற்கொண்டு வரும் தொல்லைகளைத் தாங்கமுடியாத சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையை விட்டுப் போகத்திட்டமிட்டுள்ளன. மனிதாபிமான நெருக்கடி நிலையை அரசு யுத்தக் கருவியாகப் பயன்படுத்துகிறது என்று மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இலங்கையின் ஏனைய பகுதி[illegible] இணைக்கும் ஒரே தரைமார்க்கமான ஏ-9 பாதையைத் திறக்க அரசு மறுப்பதும் மட்டக்களப்பு வாகரைப் பகுதிக்கு நிவாரண உ[illegible]கள் செல்வதை அரசு தடுப்பதும் இதற்கு நல்ல உதாரண[illegible]மாகும்.

தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கும், பாதிக்கப்படும் தமிழ் மக்களுக்கு நிவாரணம் சென்றடைவதைத் தடுப்பதற்கும், மனித மீறல்கள் தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் சாட்சியாக அமைந்துவிடாமல் இருப்பதற்குமே சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களை இலங்கை அரசு இலங்கையிலிருந்து விரட்டியடிக்கத் திட்டமிட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடமான வடக்கு - கிழக்கில் தற்போது நிலவுகின்ற மனிதாபிமான நெருக்கடி மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை மாவட்ட ரீதியாக நாம் உங்களுக்குத் தொகுத்துத் தந்துள்ளோம் அவை கீழே தரப்பட்டுள்ளன.

### மட்டக்களப்பு மாவட்டம்

| சம்பவங்கள் | விவரங்கள் |
|---|---|
| கொலை செய்யப்பட்டவர்கள் | மொத்தம் - 82<br>அரச ஊழியர்கள் - 06<br>பெண்கள் - 07<br>குழந்தைகள் - 03 |
| காயமடைந்தோர் | மொத்தம் - 41<br>பெண்கள் - 11<br>பிள்ளைகள் - 07 |
| அரச படையினராலும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப் படையினராலும் மேற்கொள்ளப்பட்ட ஆள்கடத்தல்கள் | மொத்தம் - 267<br>உத்தியோகபூர்வ முறைப்பாடுகள்- 66<br>யுனிசெவ் அறிக்கை - 30<br>18 வயதுக்குக் கீழ்ப்பட்ட மாணவர்கள் (23-06-2006) |
| விமான மற்றும் ஆட்லறித் தாக்குதல்களால் கொல்லப்பட்டவர்கள் | மொத்தம் - 107<br>(திருமலையிலிருந்து இடம் பெயர்ந்த 97 பேர் அடங்கலாக) |
| உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் | மொத்தம் - 61,000<br>(திருமலை மாவட்டம் - சம்பூர், ஈச்சிலம்பற்று ஆகிய இடங்களில் இருந்து - 41,000<br>மட்டக்களப்பு மாவட்டம் - 20,000 |
| அகதிமுகாம்கள் | மொத்தம் - 13<br>வாகரை - 06<br>மட்டக்களப்பு - 04<br>படுவான்கரை - 03 |
| அரச படையினராலும் ஒட்டுப்படையினராலும் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச்சம்பவங்கள் | மொத்தம் - 07 |
| சேதமடைந்த வீடுகள் | 250 இற்கு மேல் |
| ஒட்டுப்படையினரின் முகாம்கள் | மொத்தம் - 08<br>மட்டக்களப்பு, வாழைச்சேனை, செங்கலடி ஆகிய இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைந்துள்ளன. |

தமிழீழ விடுதலைப் புலிகளினதும், கட்டுப்பாட்டுப் பகுதிகளையும், அரசின் கட்டுப்பாட்டுப்பகுதிகளையும் இணைக்கும் 9 வீதிகள் மட்டக்களப்பில் மூடப்பட்டுள்ளன. இவற்றை மூடி கீழ்வரும் கட்டுப்பாடுகளை இலங்கை அரசு விதித்துள்ளது.

01. பொருளாதாரத் தடை.
02. எரிபொருள் தடை.
03. கட்டடப்பொருட்கள் தடை.
04. விவசாய மற்றும் ஏனைய செயற்பாடுகள் தடை.
05. மீன்பிடி முற்றாகத் தடை.
06. பார வாகனங்கள் பயணிக்கத்தடை.
07. உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குத் தடை.

### அம்பாறை மாவட்டம்

| சம்பவங்கள் | விவரங்கள் |
|---|---|
| கொலைகள் | மொத்தம் - 25<br>ஒட்டுப்படையினரால் மேற்கொள்ளப்பட்டவை - 12<br>அரச படையினரால் மேற்கொள்ளப்பட்டவை - 13 |
| இராணுவ நடவடிக்கைகள் காரணமாகக் காயமடைந்தோர் | 20இற்கு மேல் |
| அரசுமற்றும் ஒட்டுக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தல்கள் | மொத்தம் - 65 |
| உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் | மொத்தம் - 15,000 பேர் (925 குடும்பங்களைச் சேர்ந்தோர்) |
| அகதிமுகாம்கள் | மொத்தம் - 03<br>கல்முனை, ஆலையடி வேம்பு, திருக்கோவில் |
| அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவங்கள் | மொத்தம் - 17 |
| சேதமடைந்த வீடுகள் | 250 இற்கு மேல் |
| ஒட்டுப்படையினரின் முகாம்கள் | மொத்தம் - 05 |

### முல்லைத்தீவு மாவட்டம்

| சம்பவங்கள் | விவரங்கள் |
|---|---|
| கொலைகள் | மொத்தம் - 62<br>(அரச படையினர் மேற்கொண்ட விமான மற்றும் ஷெல் தாக்குதல்களாலும் ஒட்டுப்படையினர் மேற்கொண்ட கிளைமோர் மற்றும் கண்ணிவெடித் தாக்குதல்களாலும்) |
| காயமடைந்தோர் | மொத்தம் - 94<br>(அனைவரும் பாடசாலை மாணவர்கள்) |
| உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் | 1,13,056 பேர்<br>(26,552 குடும்பங்களைச் சேர்ந்தோர்) |

மாதாந்தம் தேவைப்படும் எரிபொருள்

01. மண்ணெண்ணெய் - 14 லட்சம் லீற்றர். (6 லட்சம் லீற்றர் மாத்திரம் வழங்கப்படுகிறது)

02. பெற்றோல் - 08 லட்சம் லீற்றர் (பெற்றோல் வழங்கப்படுவதில்லை)

03. டீசல் - 32 லட்சத்து 98 ஆயிரம் லீற்றர் (டீசல் வழங்கப்படுவதில்லை)

### யாழ். மாவட்டம்

| | |
|---|---|
| மொத்த சனத்தொகை | 6 லட்சத்து 53ஆயிரத்து 755 பேர் (ஒரு லட்சத்து 88 ஆயிரத்து 266 குடும்பங்களைச் சேர்ந்தோர்) |
| வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோர் | 4 லட்சத்து 31 ஆயிரத்து 516 பேர் (ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 465 குடும்பங்களைச் சேர்ந்தோர்) இவர்களில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 675 பேருக்கு மட்டுமே அரசால் இலவசமாக வழங்கப்படும் உலர் உணவு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. (53 ஆயிரத்து 615 குடும்பங்களைச் சேர்ந்தோர்) |
| மீன்பிடித்தொழிலில் தங்கியுள்ளோர் | ஒரு லட்சம் பேர் ( 17 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தோர்)<br>தற்போது அரசால் மீன்பிடித் தொழில் தடைசெய்யப்பட்டுள்ளது. இன்னும் இவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை. |
| உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் | 42 ஆயிரம் குடும்பங்கள் |
| மாதம் ஒன்றிற்கான உணவுத் தேவை | 11ஆயிரம் மெற்றிக்தொன் (8 ஆயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கலாக).<br>கடந்த மூன்று மாதங்களாக 14 ஆயிரம் மெற்றிக்தொன்களே கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 19 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடாகவுள்ளன. |
| மாதம் ஒன்றிற்கான எரிபொருள் தேவை | 01. மண்ணெண்ணெய் - 15 லட்சம் லீற்றர்.<br>02. பெற்றோல் - 8 லட்சம் லீற்றர்.<br>03. டீசல் - 32 லட்சத்து 98 ஆயிரம் லீற்றர் |

இருப்பினும் தற்போதுள்ள எரிபொருள் அளவு போதாதுள்ளது.

உத்தியோகபூர்வப் புள்ளி விவரங்கள் அரசால் நிறுத்தப்பட்டுவிட்டன.

| சம்பவங்கள் | விவரங்கள் |
|---|---|
| கொலைகள் | 297 (2006 ஏப்ரலிலிருந்து) |
| காணாமற்போனோர் | 185 (2006 ஏப்ரலிலிருந்து) |
| காயமடைந்தோர் | 188 (2006 ஏப்ரலிலிருந்து) |

### மன்னார் மாவட்டம்

| சம்பவங்கள் | விவரங்கள் |
|---|---|
| கொலைகள் | மொத்தம் - 30 |
| காயமடைந்தோர் | மொத்தம் - 64 |
| காணாமற்போனோர் | மொத்தம் - 03 |
| உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் | மொத்தம் - 17,042<br>மன்னார் - 63, நானாட்டான் - 708, முசலி - 307, மடு - 5,795, மாந்தை மேற்கு - 3041, பேசாலை - 5,136, சிறு தோப்பூர் - 250, மதுரன் கோவில் - 480, கடான்பத்திரி - 915, வங்காளைபாடு - 347 |
| அகதிமுகாம்கள் | மொத்தம் - 02<br>01. தச்சனா மருதமடு - 438 பேர்<br>02. மடு தேவாலயம் - 5,197 பேர் |
| அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் சேதமான மீன்பிடிப் படகுகளின் பெறுமதி | மொத்தம் 5 கோடி 45 லட்சத்து 38 ஆயிரத்து 900 ரூபா<br>01. பேசாலை - இரண்டு கோடி 11 லட்சத்து 11 ஆயிரத்து 700 ரூபா<br>02. வங்காலை - 2 கோடி 83 லட்சத்து 85 ஆயிரம் ரூபா.<br>03. மதுரங்கோவிலாறு - 36 லட்சத்து 80 ஆயிரம் ரூபா.<br>04. சிறுதோப்பூர் மற்றும் கடயப்பத்திரி - 05 லட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா.<br>05. ஓலைத் தெருவாய் - ஒரு லட்சத்து 21 ஆயிரம் ரூபா.<br>06. சின்னக்கந்தல் - 3 லட்சத்து 96 ஆயிரம் ரூபா.<br>07. விடத்தல்தீவு - 3 லட்சத்து 16 ஆயிரத்து 500 ரூபா.<br>08. புதுக்குடியிருப்பு -20 ஆயிரம் ரூபா. |
| படையினரின் இராணுவ நடவடிக்கையால் சேதமான வீடுகள், கடைகள் | 19 வீடுகள், 12 கடைகள். |

### திருமலை மாவட்டம்

| சம்பவங்கள் | விவரங்கள் |
|---|---|
| கொலைகள் | மொத்தம் - 124<br>01. அரச ஊழியர்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் - 27<br>02. மாணவர்கள், சிறுவர்கள் - 11 |
| ஆட்கடத்தல் | மொத்தம் - 68, அரச ஊழியர்கள் - 09 |
| அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைகள். | மொத்தம் - 72 |
| அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் மற்றும் வான் தாக்குதல்களால் உயிரிழந்தோர் | மொத்தம் - 104<br>சிறுவர்கள் - 13 |
| காயமடைந்தோர் (படையினரின் தாக்குதலால்) | மொத்தம் - 985<br>சிறுவர்கள் - 51 |

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சா மாபிள் பதித்தல்

நவீன தொழில்நுட்பங்களுடன் வடகீழ் மாகாண ஆரம்பகால தொழில் விற்பன்னர்

தரமான மூலப் பொருள்களுடன் வேலை செய்து கொடுக்கப்படும்.

(தேவை ஏற்படின் மின்சார வசதி செய்யப்படும்)

'மாபிள்ஸ்'
கண்டாமை, தொல்புரம். தொ.பே 222 5286, 222 6729

(54899)

## பாடசாலை மாணவர்களுக்கான வான் சேவை

மானிப்பாய், சுதுமலை, தாவடி ஊடாக யாழ். பிரபல கல்லூரிகளுக்கு புதிய பஸ் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

தொடர்புகளுக்கு:
*நவரெட்ணம் [ரஞ்சன்]*
*சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.*

திருமணம் மற்றும் வைபவங்களுக்கும் டொல்பின் ரக AC வான் சேவையும் உண்டு.

*தொலைபேசி இல. 021 4590945*

தொடர்பு:
*சோ. சிவரெத்தினம்*
*81/2, ஆஸ்பத்திரி வீதி, யூனியன் லேன், யாழ்ப்பாணம்.*

# கொலைகள், தாக்குதல்கள்....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### உள்ளூரில் இடம்பெயர்ந்தோர்

### மூதூர் கிழக்கு

* விமானக் குண்டு வீச்சால் சம்பூரைச் சூழ்ந்துள்ள பகுதிகளுக்குக் கடும் சேதம் ஏற்பட்டன.

* அதிகமான மக்கள் மட்டக்களப்பு வாகரைப் பகுதிக்கு இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்துவருகின்றனர்.

சேதமானவை கிராமங்கள் - 23, குடும்பங்கள் - 3,716, சனத்தொகை - 15,201, பாடசாலைகள் - 20 பொதுக்கட்டடங்கள், கோவில்கள், விவசாயம், வீடுகள் போன்றவை சேதமாகின.

### வெருகல்/ஈச்சிலம்பற்று

* மக்கள் மட்டக்களப்பு வாகரைக்கு இடம்பெயர்ந்து அங்கு அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

**சேதமானவை** கிராமங்கள் - 25, குடும்பங்கள் - 2,798, சனத்தொகை - 12,923, பாடசாலைகள் - 12, அரச கட்டடங்கள், கோவில்கள், விவசாயம் மற்றும் வீடுகள் போன்றவை சேதமாகின.

### மூதூர் மேற்கு

* விமான மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் இறால்குழி மற்றும் நாவலடி மக்கள் பாதிக்கப்பட்டனர்.

* இரு கிராமங்களும் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன.

* அனைத்து மக்களும் இடம்பெயர்ந்து கிண்ணியா, ஈச்சிலம்பற்று, ஆலங்கேணி, திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள அகதிமுகாம்களில் வாழ்கின்றனர்.

**சேதமானவை:** கிராமங்கள் - 02, குடும்பங்கள் - 163, சனத்தொகை - 623, பாடசாலை - 01, அரச கட்டடங்கள், கோவில்கள், விவசாயம், வீடுகள் போன்றவை கடுமையாகத் சேதமாகின.

### மொரவெவ - பண்குளம், சாந்திபுரம், நொச்சிக்குளம்

* மூன்று , இளைஞர்கள் காணாமற் போனதையடுத்து மக்கள் இடம்பெயர்ந்து திருகோணமலையிலுள்ள அகதிமுகாமில் வாழ்கின்றனர்.

**சேதமானவை:** கிராமங்கள் - 03, குடும்பங்கள் - 295, சனத்தொகை - 1,181

### சேருவில - லிங்கபுரம், அதியம்மாங்கேணி, சிவபுரம், தங்கநகர்

* இராணுவ நடவடிக்கையால் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

* இயந்திரங்கள், வாகனங்கள், நகைகள் போன்றவை கொள்ளையிடப்பட்டன. பயத்தின்காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து திருகோணமலையில் அமைந்துள்ள அகதிமுகாம்களிலும் தத்தம் ஊர்களிலுள்ள பொது இடங்களிலும் வாழ்ந்துவருகின்றனர்.

**சேதமானவை:** கிராமங்கள் - 04, குடும்பங்கள் - 385, சனத்தொகை - 1,483, பாடசாலைகள் - 03, பொதுக்கட்டடங்கள், கோவில்கள் சேதமாகின.

### மூதூர் தெற்கு

**சேதமானவை:** கிராமங்கள் - 51, குடும்பங்கள் - 9,679, சனத்தொகை -27,700, பாடசாலைகள் - 36, பொதுக்கட்டடங்கள், வைத்தியசாலைகள், கோவில்கள் போன்றவை சேதமாகின. இடம்பெயர்ந்த முஸ்லிம் மற்றும் சிங்களவர்களை மாத்திரம் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### திருகோணமலை கிராமமும் சூழலும்

01. தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் வாழ்கின்றனர்.
02. முப்படையினராலும் சூழப்பட்டுள்ளன.
03. அதிகமான தமிழ் வர்த்தகர்கள் அரச படைகள் மற்றும் ஒட்டுக் குழுவினரால் கடத்தப்பட்டுள்ளனர். இதனால், இங்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.
04. கொலைகள், ஆட்கடத்தல்கள், கைதுகள், சித்திரவதைகள் தொடர்கின்றன.
05. மீன்பிடித் தொழில் முற்றாகத் தடுக்கப்பட்டுவிட்டது.
06. திருக்கடலூர், முருகப்பூரி, 10ஆம் பிரிவு, சாலி, கோணேசபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆயிரம் மீனவக்குடும்பங்கள் இந்தியாவுக்குச் சென்றுவிட்டனர்.
07. அதிகமான ஒட்டுப்படையினரின் அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.
08. மூதூரில் தங்கியுள்ள அகதிகள் தொடர்பாக அரச அதிபர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
09. பயத்தின் காரணமாக தினமும் 10 முதல் 15 குடும்பங்கள் ஏனைய மாவட்டங்களுக்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

### வவுனியா மாவட்டம்

| சம்பவங்கள் | விவரங்கள் |
|---|---|
| படையினரால் கைதுசெய்யப்பட்டோர் | 49 |
| காணாமற்போனோர் | 197 |
| கொல்லப்பட்டோர் | 60 |
| கொள்ளைச் சம்பவங்கள் | 46 |
| உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் | 7,000 |

### கிளிநொச்சி மாவட்டம்

| சம்பவங்கள் | விவரங்கள் |
|---|---|
| கொல்லப்பட்டோர் | மொத்தம் - 05 |
| காயமடைந்தோர் | மொத்தம் - 10 |
| உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் | 5,063 பேர் (அத்தனைபேரும் தொழிலின்றியும், வருமானமின்றியும் உள்ளனர்.) |

வடக்கு - கிழக்கில் தமிழர்கள் எதிர்நோக்கும் மனித உரிமை மீறல்களைக் கருத்திற்கொண்டு, இது தொடர்பாக பொருத்தமான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்து 1984 இல் பிறந்த A/L கல்வியில் சித்தியெய்து உயர் கல்வி ஒன்றில் ஈடுபட்டுள்ள 5'2" உயரமுள்ள செவ்வாய் குற்றமற்ற பெண்ணிற்கு படித்த வெளிநாட்டு/ உள்நாட்டு மணமகன் தேவை. ***தொடர்புக்கு: விளம்பர இல.2931, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.***

## நீரிழிவு DIABETES

* சிறுகுறிஞ்சாப் பவுடர் Gymnema Powder
* 2 டி கோலா 2 D cola
தலைமயிர் நரைத்தல்/உதிர்தல் Hair Gveying/ fallind
* பிபிஜி கெயார் ஒயில் BBG Hair Oil
திராட்சை Grapes
* திராட்சை வைன் Grapewine
* திராட்சை ரசம் Grapejuice
வினாகிரி Vineger
* இயற்கை அரிசி வினாகிரி Natural rice vineger
அச்சா மென்பானங்கள் Achcha Soft drinks

**BIO TEC ORIENT**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

அரிய வாய்ப்பு உங்களுக்கும் கிடைக்கலாம்

WORK IN **AMERICA**
THE LAND OF OPPORTUNITIES

DV LOTTERY
**VISA**
**GREEN CARD**

Send your application only on inter net before December 3,2006

விண்ணப்பம் கிடைக்கபெற்றதற்கான Confirmation of receipt from USA State Dept. வழங்கப்படும்

உங்கள் படம் ஸ்கேன் டிஜிடல் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் இணையத்தளம் மூலமாக அனுப்பப்படும்
உங்கள் சமீபத்திய 2" x 2" முகப்படத்துடன் நேரில் வருக

**Rs.300/=** மட்டுமே

For postal send a addressed envelope

Additional Entry Rs.75/=

Check your Canada Migration points on line

**impronett**
GGS-5. 1st Division, Maradana, Colombo 10
(Between Kaleel Hospital & Technical Junction)
Tel: 4905726, 2430073, 0777 795183
E-mail:impronett@gmail.com

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன்

(ஓய்வுபெற்ற கட்டடத் தொழில் நுட்பவியலாளர், யாழ்ப்பாணம்)



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 126/10, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் நேற்று (04.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை (நைஸ்)-லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும் இலந்தைச் சாலை, காரைநகரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை (ஐயம்பிள்ளை மாஸ்ரர்) - இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும் தேவமங்கையின் அன்புக் கணவரும் தேவபாலன் (பொறியியலாளர், கனடா),அனுஷா (Oxfort University, London) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.S இராகவனின் (லண்டன்), அன்பு மாமனும், வைஷ்ணவியின் (லண்டன்) அருமைத் தாத்தாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2006) காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*126/10, அரசடி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 6237*

தகவல்: தேவமங்கை (மனைவி).

## உணவகங்களுக்கு உலர் உணவு விநியோகம்

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் தற்சமயம் இயங்கிக்கொண்டிருக்கும் உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைக்கு உலர் உணவுப் பொருள்கள் நாளை திங்கட்கிழமை வழங்கப்படும்.

அரச அதிபரினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்தப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதிப் பத்திரங்களை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் கிராம அலுவலரின் சிபார்சுக் கடிதம், வியாபாரப் பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றுடன் சமுகமளிக்கவேண்டும் என்றும் - பிரதேச செயலக திட்டப்பணிப்பாளர் க.மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

(அ-1)

# பலாலி, அட்டாளைச்சேனைஆசிரிய கலாசாலைகளில் ஆங்கில கற்கைநெறி ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.5

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றில் ஆங்கில ஆசிரியர்களுக்கான கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு ஆசிரியர் கல்வி நிர்வாகப்பகுதியின் ஆணையாளர் கே. மொகமட் தம்பி இணக்கம் தெரிவித்துள்ளார் என வடக்கு - கிழக்கு மாகாண புதிய ஆங்கில ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கான கற்கை நெறிகளை ஆரம்பிப்பது தொடர்பான கோரிக்கை ஒன்றை கல்வி அமைச்சுக்கு விடுத்திருந்தோம்.

இது குறித்து ஆராய்ந்து ஆசிரிய கல்வி நிர்வாகப் பகுதியின் ஆணையாளர் கே. மொகமட் தம்பி பலாலி மற்றும் அட்டாளைச்சேனை கலாசாலைகளில் இன்னும் இரு வாரங்களில் கற்கை நெறிகளை ஆரம்பிற்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார் என்றுள்ளது.

(1-202)

## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman of the Tender Board, University of Jaffna is inviting sealed tenders from qualified Consultants/ Consultancy firms for the following:

1. Consultancy Service for the Construction of Buildings and Structures and Services for the Faculty of Applied Science of theVavuniya Campus at Pampaimadu.
2. Consultancy Service for the Construction of Buildings and Structures and Services for the Faculty of Business Studies of the Vavuniya Campus at Pampaimadu.

Bid documents may be obtained from the Assistant Registrar/Administration, University of Jaffna or the Asst.Registrar/ Administration, Vavuniya Campus of the University of Jaffna until 20.11.2006 upon producing a receipt for cash payment of Refundable deposit of Rs. 10,000/= and a Non-refundable deposit Rs. 500/= at the Shroff's Counter of either the University of Jaffna or Vavuniya Campus of the University of Jaffna for each bid.

Perfected bid documents for each of the two works should be prepared and sealed separately and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's Office, University of Jaffna or Rector's office of the Vavuniya Campus, Park Road, Vavuniya.

Bids will be accepted until 1.30 pm on 27.11.2006 and opened immediately thereafter.

Bid documents may be inspected, if necessary, by the tenderers free of charge at the Administration Branch of this University Jaffna or the Administration Branch of the Vavuniya Campus during office hours.

**University of Jaffna**
**P.O Box 57,**
**Thirunelvely,**
**Jaffna.**
**02.11.2006.** (c/51263) **Registrar.**

## VNC கொங்கிறீற் கற்கள்

| கல் அறுப்பதற்கான கலவை அளவு | தூண் அறுப்பதற்கான கலவை அளவு |
|---|---|
| 1 பைக்கெற் சிமெந்து, நீர் | 1 பைக்கெற் சிமெந்து, கம்பி வகைகள் |
| 1 கடகம் கருங்கல் துள் | 2 கடகம் கருங்கல் தூள், நீர் |
| 4 கடகம் மண் | 2 கடகம் மண் |
| 8 கடகம் 1½"சல்லிக்கல் | 3 கடகம் 1½"சல்லிக்கல் or 1" சல்லிக்கல் |
| 5 கடகம் ¾" சல்லிக்கல் or $^5/_8$ நூல் சல்லிக்கல் | 4 கடகம் $^5/_8$ நூல் சல்லிக்கல் |
| மொத்தம் 18 கடகம் 55 - 60 கல் | மொத்தம் 11 கடகம் |
| 1 அடி நீள 4" அகல கல் ஒன்றின் நிறை 10 kg விலை 39/= | தூண்களுக்குள் ஒற்றைக் கம்பி புகுத்துதல் தவிர்க்கப்படுகிறது. |

*கலவைகள் கலக்கப்பட்டு கற்கள் அறுக்கப்படுவதை காலை 6.30 - 12.30 மணிவரை நேரடியாகப் பார்வையிடலாம். 4½"- 3 ¾" வால் கால் 7 அடி உயர வேலித்தூண் 575/= , 6"-4½" வால் கால் 7 ½" அடி உயர வேலித்தூண் 775/=, எல் (L) வடிவக்கல் 85/= , ரி(T) வடிவக்கல் 80/= வயறிங் வெட்டுக்கல் 40/= மதில்களைப் பலப்படுத்தி கொங்கிறீற் இடும் வை (Y) வடிவக்கல் சோடி 110/=*

***We manufacture concrete blocks and pillars in accordance to the recommended specifications of construction specialists***

தரமான கொங்கிறீற் பொருள்களை கொள்வனவு செய்வோர் மட்டும் எம்மை நாடவும்.
தொடர்புகளுக்கு:

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ரஞ்சன்ஸ் ஹாட்வெயார், சுன்னாகத்தில் துவாரகன் ஹாட்வெயார்- 021 4591833, த. மகேஸ்வரன்-சாயி மருந்துக்கடை, மல்லாகம், அ.இராசா- சுழிபுரம் மத்தி- தொ.பே.: 060 221 3209, அளவெட்டியில் ஜெயம் பல்பொருள் வாணிபம்-தொ.பே.: 060 221 3236.எமது பெயரைப் பாவித்து வேறு கொங்கிறீற் பொருள்களை விற்பனை செய்பவர்கள் தவிர்த்துக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

**VNC, கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் சதுக்கம், அளவெட்டி மத்தி, அளவெட்டி.**

(54602)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனையாளர்களை கிளைகளுக்கேற்ப வகுப்பதன் மூலம் விநியோகத்தைச் சீராக மேற்கொள்வதற்கு வசதி ஏற்படும்

## யாழ். ப.நோ.கூ. சங்கத்தினர் கருத்து

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்கு இப்போதுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கையை மாற்றும் விதத்தில் வகுத்து - பிரித்து - விட்டால் விநியோகத்தை இலகுவாகச் செய்யக்கூடியதாக இருக்கும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது குறித்து அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

யாழ். ப.நோ.கூ.சங்கத்தின் கீழ் 30 ஆயிரம் பாவனையாளர்கள் உள்ளனர். அத்துடன் 33 கிளைகளும் உள்ளன.

ஒரு கிளைக்கு ஆயிரம் பேர் வீதம் பாவனையாளர்களைப் பிரித்து பொருள் விநியோகத்தை மேற்கொள்ள ஏற்பாடு செய்யும் போது ஒவ்வொரு கிளையினரும் வேலையை இலகுவாகச் செய்யமுடியும்

உரிய முறையில் கிளைகளுக்கு மக்களை பரவலாக்கம் செய்யாது விடப்பட்டுள்ள நிலையில் பல்வேறு நிவாரண விநியோகங்களை ப.நோ.கூ.சங்கக் கிளைகளிடம் வழங்குவதன் மூலம் அங்கு வேலைப்பளு அதிகரிக்கின்றது. இதனால், உரிய நேரங்களில் உணவுப் பொருள்களை விநியோகம் செய்ய முடியாத நெருக்கடி நிலைகள் ஏற்படுகின்றன.

இதேவேளை -

அண்ணளவாக 500 குடும்ப அட்டைகள் உள்ள கிளைகளுக்கு பரவலாக 900 அட்டைகளுக்கு உணவுப் பொருள் விநியோகம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. இந் நிலையில், ஒதுக்கப்பட்ட பொருள்களுக்கு மேலதிகத் தேவை ஏற்படுகின்றது.

இந்நிலையில், மேலதிகமாகக் கிளைகளுக்குப் பொருள்கள் வழங்கப்படாமையால் குறிப்பிட்ட கிளையின்கீழ் நிரந்தரக் குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு சில சமயங்களில் பொருள்கள் கிடைக்காமல் போகும் நிலைமையும் ஏற்படுகின்றது.

எனவே, ஒவ்வொரு குடும்ப அட்டைகளுக்கும் உரிய கிளைகளில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று உரிய அரச் அதிகாரிகளை கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் கேட்டுள்ளன. (203-111)

## கடந்த மாதம் அதிகளவு மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ.5

இந்த வருடம் ஜனவரி முதல் கடந்த ஒக்ரோபர் மாதம் முடிவு வரை யாழ்.மாவட்டத்தில் 563.6மி.மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

வளிமண்டலத் திணைக்கள யாழ். அலுவலகம் இத்தகவலைத் தெரிவித்தது.

கடந்த மாதத்தில் மட்டும் 333.9 மி. மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும்-

கடந்த வருடத்தில் இதே மாதத்தின் மழைவீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது இம்முறை அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

நவம்பர் மாதத்திலும் அதிகளவு மழை வீழ்ச்சிக்கு வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-88)

## புற்று நோயாளர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், நவ.5

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் பழுதடைந்துள்ள கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரத்தைத் திருத்துவதற்காகக் கொழும்பிலிருந்து தொழில்நுட்பவியலாளர்கள் நாளை மறுதினம் யாழ். வரவுள்ளனர்.

புற்று நோய் கதிர்வீச்சு சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் எதிர்வரும் புதன் கிழமை காலை 8 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் 26 ஆம் வார்ட்டிற்கு வருகை தருமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (202)

## மீனின் விலை நாளுக்குநாள் ஏறுகிறது

பண்ணை மீன் சந்தையில் மீன்களின் விலை அளவுக்கு மீறி உயர்வடைந்து காணப்படுகின்றது. இதன்காரணமாக சந்தைக்கு வரும் பெருமளவானோர் வெறும் கைகளுடன் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அதிக விலைகொடுத்து மீனை வாங்க முடியாமையே இதற்குக் காரணம் என்று பலரும் தெரிவிக்கின்றனர். வெள்ளிக்கிழமைகளில் கூட மீனின் விலை சற்றும் குறைவடையாத நிலையே காணப்படுகின்றது.

நண்டு ஒன்றின் விலை நூறு ரூபா முதல் 125 ரூபாவரையும் 250 கிராம் இறால் 250 ரூபாவாகவும் விளைமீன் அரைக் கிலோ 250 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

ஏனைய மீன்கள் ஒவ்வொன்றும் 350 ரூபாமுதல் 600 ரூபாவரைக்கும் சூடை போன்ற சிறியரக மீன்கள் பங்கு 250 முதல் 300 ரூபாவரைக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அதிக விலைக்கு மீன், நண்டு, இறால் போன்றன விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் சிலர் அவற்றை வாங்குவதில் மிகவும் ஆர்வம்காட்டி வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (1-203-111)

## கப்பல் மூலம் குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்ட நல்லின விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். மாவட்டத்தின் காலபோக பயிர்ச் செய்கைக்குத் தேவையான நல்லின சிறுதானிய விதைகள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. இவை விவசாயத் திணைக்களம் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன என்று விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்மேலும்தெரிவிக்கையில்:-

விவசாயத் திணைக்கள மாகாணப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் எடுத்துவரப்பட்டுள்ளன. விதை தேவையானவர்கள் உரிய திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயத் திணைக்களத்தின் ஊடாக 90 கிலோ கிராம் பயறு, 183 கிலோகிராம் கௌபி என்பனவும்-

கமநலத் திணைக்களத்தின் ஊடாக 20 கிலோகிராம் சோளம், 300 கிலோகிராம் நிலக்கடலை, 29.2 கிலோகிராம் வெண்டி, 5.5 கிலோகிராம் புடோல், 28.5 கிலோகிராம் பயற்றை, 4 கிலோகிராம் மிளகாய் விதை, 4.3 கிலோகிராம் கத்தரி என்பனவும் -வேர்ள்ட் விஷன் நிறுவனமூடாக 700 கிலோகிராம் நிலக்கடலை, 300 கிலோகிராம் சோளம் என்பனவும் வழங்கப்படவுள்ளன. (202-88)

### பயிற்சிநெறி

கைதடி,நவ.5

மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் மற்றும் மகளிர் அபிவிருத்திநிலை போதனாசிரியர்கள் ஆகியோருக்கான பயிற்சிநெறி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதிவரை யாழ். செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.(202-75)



யாழ். பெரியகடை மாதர் அபிவிருத்திச் சங்கம் சொன்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் 19 பேருக்கு சுயதொழில் வாய்ப்புக்கான கடன்களை வழங்கியுள்ளது.

கடன் வழங்கும் நிகழ்வில் சங்கத் தலைவி இ.தங்கராஜா, ஜே/80 கிராம சேவையாளர் எம்.ஆ.கே.ரட்ணராஜா ஆகிய இருவரும் இணைந்து பயனாளி ஒருவருக்கு கடன் வழங்குவதைப் படத்தில் காணலாம். (202)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

வடமராட்சிகிழக்கு,நவ.5

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 7இல் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் வகுப்பில் ஆங்கிலப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு ஆங்கிலபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-182)

* * *

வடமராட்சிகிழக்கு,நவ.5

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, தரம் 11ஆகிய வகுப்புகளில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வகுப்புகளில் விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களைப் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-182-202)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்தவருடம் அறிமுகப்படுத்தப்படவுள்ள தரம் 6, 10 ஆகிய வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

'வழிகாட்டலும் ஆலோசனையும்' செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 12ஆம் திகதியும் விஞ்ஞான பாடச் செயலமர்வு நாளை திங்கட்கிழமையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

தரம் 10 வகுப்புக்கான வரலாறு பாடச் செயலமர்வு எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட பாடங்களுடன் தொடர்புடைய ஆசிரியர்களை செயலமர்வுகளில் கலந்துகொள்ளுமாறும் வழிகாட்டலும் ஆலோசனையும் செயலமர்வுகளுக்கு அனைத்துப் பாட ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (1-202)

## வாசகர் திருமுகம்

### மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிக்கும் நிலை

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மனிதாபிமானமற்ற செயல்கள் யாழ். குடாநாட்டில் பெருகிவிட்டன. நாள்கூலி செய்பவர்களுக்கு வருமானம் இல்லாத பிரச்சினை, பொருள்களின் விலையேற்றம் அத்துடன், போசாக்கான உணவுக்கான அங்கலாய்ப்பு. இதன் மத்தியில் மக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் வரிசையில் மழைகளிலும் வெயிலிலும் நின்று தூங்கும் அவலம். இந்த நிலையில் சங்கக்கடைக்காரரின் அடாவடித்தனம் வேறு.

பொருள்களின் நிறையைக் குறைப்பதும், சிட்டைகளை மக்களின் கைகளில் கொடுக்காமல் மறைத்து வைப்பதும், சிட்டைகளை விளங்கிக்கொள்ள முடியாதபடி எழுதுவதும் இன்று இவை வாடிக்கையாகிவிட்டன. இந்தச் செயல் பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்தது போலிருக்கிறது. இவர்கள் இறுதியில் தங்களுடன் கொண்டுபோகப் போவது வெறும் பாவமூட்டைகளாகத்தான் இருக்கும். இதனைக் கருத்திற் கொண்டு மக்களின் வயித்தெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாமல் மனிதாபிமானமான முறையில் நடந்து புண்ணியத்தைத் தேடிக்கொள்வார்களா இவர்கள்?

**கந்தர்மடம்.** **சி.ஜோதி.**

### தென்னைமர சிலந்தி நோயை கட்டுப்படுத்தும் வழி என்ன?

**யாழ்.** குடாநாட்டில் எல்லா இடங்களிலும் தென்னைமரங்களில் சிலந்தி நோய் இன்று பரவியுள்ளது. குரும்பைப் பருவத்திலேயே இந்நோயின் தாக்கம் உண்டாகி, காய்முற்றித் தேங்காய் ஆகும் வரை கோம்பையில் உள்ள சத்தை உறுஞ்சுவதால் தேங்காயின் தோல் இறந்து கபில நிறமாக மாறுகிறது. இக்காரணத்தால் தாக்கமுற்ற தேங்காய் முழு வளர்ச்சி அடையாது சிறிதாகத் தோன்றும். குரும்பைப் பருவத்தில் தாக்கமுற்ற காய்கள் சில வாடி விழுவதும் உண்டு. இத்தாக்கத்தால் பீடிக்கப்பட்ட தேங்காய்கள் விகாரமான தோற்றத்தை அடைந்திருப்பதால் உற்பத்தியாளர்கள் அவற்றை விற்பனை செய்வதிலும் கஷ்டம் அடைகிறார்கள்.

எனது 20 மரங்களில் இந்நோய் வரமுன் சராசரி மாதா மாதம் 250 தேங்காய்கள் பிடுங்க முடிந்தது. இந்நோயின் தாக்கம் கண்ட பின்பு படிப்படியாகக் குறைந்து இன்று 120 தேங்காய் மட்டுமே பிடுங்க முடிகிறது.

இந்நோயைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாணம் தெங்குச் செய்கைச் சபை முயற்சித்ததாகத் தெரியவில்லை. இந்தியாவில் இந்நோய்க்கு தமிழ் நாட்டில் மர அடியில் வேர்களினூடாக மருந்து செலுத்தி நோயைக் கட்டுப்படுத்தியதாக அறிகின்றேன்.

ஆகவே, யாழ்ப்பாணம் தெங்கு பயிர்ச் செய்கைச் சபை இவ்விடயத்தை ஆராய்ந்து இதற்கான மருந்துகளைப் பெற்றுப் பயிற்சி கொடுக்கப்பட்ட இளைஞர்களிடம் கொடுத்து பொதுமக்களிடம் மருந்துகளை எப்படி உபயோகிப்பது என்பதை அறிவுறுத்த வேண்டும். இது முடியாதாயின் பத்திரிகைகளில் இதைப் பற்றி விளக்கமளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**சுதுமலை தெற்கு, மானிப்பாய்.** **கா.நடராலிங்கம்.**

### முதியோர் அறிமுக அட்டையின் மதிப்பு என்ன?

சமூக சேவைகள் திணைக்களத்தால் முதியோருக்கு முதியோர் அறிமுக அட்டை வழங்கப்பட்டுள்ளது. முதியவர்கள் பல்வேறு அலுவல்கள் நிமித்தம் திணைக்களங்கள் மற்றும் ஏனைய அலுவலகங்களுக்குச் செல்லும்போது சிரமமின்றி தமது தேவைகளை நிறைவு செய்வதற்காகவே இந்த அறிமுக அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள முதியவர்கள் சிலரும் இந்த அட்டைகளைப் பெற்றுள்ளனர். ஆனால், அந்த அட்டைக்கு இங்கு எந்தவித மதிப்பும் அளிக்கப்படுவதில்லை.

பல இடங்களில் அவர் எவ்வளவு வயது முதிர்ந்தவராக இருந்தாலும், முதியோர் அறிமுக அட்டை வைத்திருந்தாலும் மிக நீண்ட வரிசையில் நின்றே தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை குடாநாட்டில் உள்ளது.

குறிப்பாக, கூட்டுறவுச் சங்கக் கடைகளில் தற்போது நிவாரணம் பெறுவதற்காக வயோதிபர்களும் கால்கடுக்கக் காத்திருக்கவேண்டிய நிலை உள்ளது. 2 நாள்களாகப் பல மணித்தியாலங்கள் காத்து நின்று சோர்வடைந்த பின்னரே பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதியவர்களின் இந்தப் பரிதாப நிலையைக் கருத்திக் கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

**யாழ்ப்பாணம்.** **க.கிருஷ்ணமூர்த்தி**

*பாதிக்கப்பட்ட முதியவர்களில் ஒருவர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாரத்தில் பயணம்

சிங்கப்பூர், மலேசியாவில்

வேலை வாய்ப்புடன் கூடிய கற்கை நெறி

**Hotel & Hospitality Management**
(12 months) Allowance/Month (50,000 - 80,000)

**Information Technology**
Diploma Advanced Diploma BSc Hons.
Computer Net Working / Science / Engineering

**Management . BBA, MBA**
Business Administration Humans resource Management
Business & Marketing, Engineering Business Management

CIMA, ACCA, CIM (Work & Study)
Entry requirements : G.C.E O/L

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளை முடித்தவுடன் மேற்படிப்பிற்கு வேலைவாய்ப்புடன் Australia, UK & USA போன்ற நாடுகளுக்கு Visa எடுத்துக்கொடுக்கப்படும்
Student Loan Can Be Arranged

**VOICEKET**

No.50, 1st floor, Galle Road, "Colombo Plaza" Colombo - 06.
0777-315554, 0777-307890

S.K.Ad's & Prints


## வடமராட்சியில் தமிழ்த்தினப் போட்டிகள்

வடமராட்சிகிழக்கு,நவ.5

வடமராட்சி கல்வி வலயத்தின் இவ்வாண்டுக்கான வலயமட்ட தமிழ்மொழித் தினப் போட்டி எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய கோட்டங்களில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்வர். (1-182)

## நெடுந்தீவிலிருந்து 25 தேங்காய்கள் எடுத்துவர அனுமதி

நல்லூர்,நவ.5

நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நகருக்கு வரும் பயணி ஒருவர் தம்முடன் 25 தேங்காய்களை எடுத்துவருவதற்கு படையினர் இப்போது அனுமதி வழங்கியுள்ளனர். முன்னர் ஒருவர் தம்முடன் ஐந்து தேங்காய்களை மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

விற்பனைக்காக மீன் வியாபாரி ஒருவர் ஐந்துகிலோ மீன்களையும், சொந்தப் பாவனைக்கென ஒருவர் இரண்டுகிலோ மீன்களையும் படகில் எடுத்துச்செல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மீன் விற்பனைக்காக எடுத்து வருபவர்கள் அதற்கான அனுமதியைப் படையினரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப-111)

## கட்டுடைக் கிளை இடமாற்றம்

வலி.தென்மேற்கு,நவ.5

அண்மையில் திருட்டு நடைபெற்ற மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுடைக் கிளை தற்போது வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் சந்திக்கு அருகிலுள்ள கட்டடம் ஒன்றுக்கு இக் கிளை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் நிவாரணம் மற்றும் பங்கீட்டுப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு நீண்டதூரம் தாம் செல்லவேண்டியுள்ளதாகக் கட்டுடைப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (1-135)

## கண்டறிய உதவுங்கள்



யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவரும், பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகத்தின் உப தலைவருமான மரியதாஸ் தொம்ஸன் 17.10.2006 செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை.

இவர் சாவகச்சேரியில் இருந்து தன்னுடைய நிறுவன முதலாளியான - சுந்தர் வெளியீடு உரிமையாளரான புவிராஜா ஸ்ரீ சுந்தரராஜா என்பவருடன் யாழ். நோக்கி NPGC 6582 என்ற பச்சை நிற ஜமகாமேற் மோட்டார் சைக்கிளில் கைதடி, நாவற்குழி, அரியாலை ஊடாகப் பயணிக்கும்போது காணாமற் போயுள்ளார்.

இவரைக் காணாமல் இவரது குடும்பமும், உறவினர்களும் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளனர். இவரது விடுதலைக்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைத்தும் உதவும் வண்ணமும் தகவல் தெரிந்தோர் உடன் தெரிவிக்கும் வண்ணமும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகம்,
46/46, அன்ரனிஸ் வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம். (54909)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



| தாயின் மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|
| 01 * 11 * 1952 | 06 * 10 * 2006 |

அமரர் **கந்தசாமி கருணாநிதி**
(இலங்கை வங்கி உத்தியோகத்தர் - பருத்தித்துறை)

06.10.2006 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவறிந்து பல வகையிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலியை வெளியிட்டோருக்கும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் அனைத்து உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (05.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டி.*

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | இறைவன் திருவடியில் |
|---|---|
| 1982 ✱ 08 ✱ 06 | 2005 ✱ 10 ✱ 18 |

# சிவஞானம் சிவகுமார்


*புன்னகையுடன் துள்ளித்திரிந்த உனக்கு*
*பூமாலைகள் தான் தரிசனம்*
*புது உலகம் காணப் புகுந்த உனக்கு*
*புது வாழ்த்துக் கூறி மடல் அனுப்ப வழியில்லை*

*கண்காணாத தேசத்தில் வைத்து*
*காலனவன் பறித்தானோ உன்னுயிரை*
*ஆண்டொன்று ஓடி மறைந்தது - எம்*
*துயரம் என்னும் மறையவில்லை.*

கோப்பாய் தெற்கு, கோப்பாய். (54395)

*நீங்காத நினைவுடன்:*
தாய், தந்தை, தங்கைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு... 1946-06-25

உதிர்வு... 2004-10-27

அமரர்

# சுப்பிரமணியம் செல்வராசா

(உரிமையாளர்-வாணிரெக்ஸ்-சாவகச்சேரி) திதி: 05-11-2006 பூரணை

அப்பா!
நாளதுபோய் வருடங்களானாலென்ன
நாமாற இப்பிறப்பே போதாதப்பா!
உம் மனம் போல குடும்பத்தை தந்த ஈசன்
எம் மனம் கதற உம்மை அழைத்தானோ?
பற்றறுத்து இவ்வுலகை விட்டேதான்
சென்ற இடம் எங்கே அப்பா?
நீங்கள் அங்கேயே காத்திருங்கள்
நாளது நேரம் சரிவரும் வேளை
ஆனந்தமில்லா எம் வாழ்வின் முடிவில்
தேடி வருவோம் உங்களிடம்...

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து உங்களின் நினைவுகளிலேயே வாழ்ந்துகொண்டிருக்கும்,

*கென்ஸ்மன் லேன், டச்சுறோட், சாவகச்சேரி.*

**-குடும்பத்தினர்.**


## 55,000 அமெரிக்க விசா லொத்தர்

நிரந்தர குடியேற்ற லொத்தர் விசாவுக்கு விண்ணப்பிக்க:-

1) இதிலுள்ள விண்ணப்பத்தை பிரதி பண்ணி, நிரப்பி சகலரதும் 2'x2' போட்டோக்கள் ரூபா 500/= மணியோடருடன் எமக்கு அனுப்பவும்.

2). விண்ணப்பதாரி, மனைவி, சகல பிள்ளைகளின் தனிப் போட்டோக்கள். 2'x2' அல்லது PP Size போட்டோவை ஒட்டாமல் பின்னால் பெயர் எழுதவும்.

3). 21 வயதுக்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

4). ஒரு குடும்பம் 2 விண்ணப்பம் (மனைவி/ கணவன்) அனுப்பலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் ரூபா 500 மணியோடரை அனுப்பவும்.

*Penguin Book Shop.*
B2/ F23, Bloemendhal Flats, Colombo - 13.
Tel : 2438367, 071 6806843

GREEN CARD APPLICATION FORM DV-2008

1 APPLICANT'S FULL NAME ..........
(UNDERLINE THE SURNAME OR LAST NAME)

2.BIRTH DATE .......... 3.PLACE OF BIRTH ..........

4.SEX : MALE / FEMALE

5. ADDRESS ..........

6.PHONE NO. ..........

7.ARE YOU MARRIED? (YES/NO)

8.NUMBER OF CHILDREN ..........
(UNMARRIED AND UNDER 21 YEARS OF AGE)

9. EDUCATIONAL QUALIFICATION
(O.L/A.L/DEGREE/OTHERS)

| | FULL NAME | SEX | DATE OF BIRTH | PLACE OF BIRTH |
|---|---|---|---|---|
| WIFE/HUSBAND | | | | |
| CHILD NO.1 | | | | |
| CHILD NO.2 | | | | |
| CHILD NO.3 | | | | |

விண்ணப்ப முடிவு திகதி 30 - 11 - 2006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## D.V 2008 விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு

55000 பேர் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்காதோர் பாஸ்போட் அளவு கலர் புகைப் படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

★ விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொண்டு விண்ணப்பத்திற்கான உறுதி பற்று சீட்டினையும் உடன் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பக் கட்டணம் 200 ரூபா மட்டுமே

திருமுருகன் கொம் நெற்,
259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
தொ.பே. 222 7310


# மரண அறிவித்தல்கள்

## இராஜலிங்கம் கபிலா



கந்தரோடை, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜலிங்கம் கபிலா 03.11.2006 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராஜலிங்கம் - ஜெயராணி தம்பதியரின் அன்பு மகளும் சுரேகா, அனித்தா, தஜீகன், தர்சன் ஆகியோரின் சகோதரியும் அருணாசலம் - பூபதி தம்பதியரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2006) முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கந்தரோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தமிழ் பாடசாலையடி,
கந்தரோடை,சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கணேசு செல்லமுத்து

அச்சுவேலியை சேர்ந்த திருமதி கணேசு செல்லமுத்து 3.11.2006 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் கணேசுவின் மனைவியும், விஜயகுமார் (அரச பாதுகாவலர்), சந்திரலேகா (பிரான்ஸ்), இந்திரலேகா, விஜயபாலன் (அரச பாதுகாவலர்), ஆகியோரின் அன்பு தாயும், அருள்நாயகம் (பிரான்ஸ்) S.P.N தர்மராசா (J.P.முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்), கணேசன் (மின்பொறியியலாளர்), திரவியம், லதாயினி ஆகியோரின் அன்பு மாமியும் நமசிவாயம், கதிரவேலு, நாகம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்பு சகோதரியும், கஜேந்திரன் (பிரான்ஸ்), பிரபா (பிரான்ஸ்), குமனேஸ்வரன் (பிரான்ஸ்) வக்ஷனா (பிரான்ஸ்), ஷானிலி (பிரான்ஸ்), தக்ஷினி, தினேஸ், குகனேஸ், வினோ, தர்மதுர்க்கா, தர்மகாயத்திரி, தர்மதட்சாயினி, செந்தூரன், மயூரன், மயூரி, செந்துாரி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஜெருமியா, ஹர்ஷாத் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (5.11.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணியளவில் முழுக்கண் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
அச்சுவேலி.

தகவல்:
மருமகன்,
S.P.M.தர்மராசா (J.P)
(54955)

## திருமதி செல்லத்துரை செல்லம்மா

இணுவில் கிழக்கு அங்களப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை செல்லம்மா நேற்று (04.11.2006) சனிக்கிழமை பி.ப 2 மணிக்குக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் பிறேமாலதி (கனடா), பவானந்தமலர் ஆகியோரின் பாசமிகு தாயும் விக்கினேஸ்வரன் (கனடா), சிவஞானசோதி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற செல்லத்துரை பாலகந்தரம், சாரங்கபாணி, நவரட்ணம், மகாலிங்கம் (கனடா), காலஞ்சென்ற நேசரத்தினம், திலகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் வேணிலா (கனடா), பிரதீபன் (கனடா), தட்சாயினி, தரணிகா, கஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 05.11.2006 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10 மணிக்கு தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு.

தகவல்:
இ.திருஞானசோதி
(மருமகன்)
(54967)

## கனகன்புளியடி ஊடான மினிபஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க முடிவு

தென்மராட்சி,நவ.5

தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் கொடிகாமத்திலிருந்து கனகன்புளியடி ஊடாக யாழ்ப்பாணத்திற்கான மினிபஸ் சேவையை (மார்க்க இல.794) நாளை 6ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளனர்.

பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த மார்க்கத்தில் தினமும் இரு சேவைகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வடமராட்சியில் குழந்தைகளுக்கு பால்மா

வடமராட்சி, நவ.5

வடமராட்சிப் பகுதியில் குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக குழந்தைகளுக்கான பால்மா வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக ஒரு தொகுதி பால்மா பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்து சேர்ந்ததை அடுத்து, கடந்த சனிக்கிழமை முதல் இவை வழங்கப்பட்டு வருகிறது.

## தீவக வலயத்தின் அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.5

தீவக வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீவக ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் கோரப்பட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன் கேட்டுள்ளார்.

(202)


### A/L Day - 2007

புவியியல் அலகு ரீதியான புதிய வகுப்புகள்
நாளை ஆரம்பம்
4.15 மணி
P.S குமரன் B.A. (Hons)
குளப்பிட்டி வீதி,
கொக்குவில்.

### புலமை பரிசில் பரீட்சை வினாத்தாள் விற்பனைக்கு

04.11.2006 அன்று நடந்து முடிவடைந்த புலமை பரிசில் வினாத்தாள் விற்பனைக்குண்டு
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
A ஞானம்ஸ் பிறிண்டேர்ஸ் - கந்தர்மடச் சந்தி
ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளலாம்.

10K.W டைனமோ
5 PHASE உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு:
222 2179
222 2445

### சேவை

55,000 அமெரிக்கா விசா லொத்தர் விண்ணப்படிவம் பெற, நவம்பர் 5ஆம் திகதி (ஞாயிறு) உதயனை பார்க்கவும்
Penguin Book Shop,
B2/F23 Bloemendhal Flats,
Colombo - 13.
Tel.- 071 6806843
011 2438367

### தவறிவிட்டது

சந்தையடி கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த கதிர்காமநாதன் அமிர்தராஜ் என்பவரது தேசிய அ.அட்டை (821511895V), விசேட அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 2.11.2006 அன்று மானிப்பாய்க்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். T.P 021 4591061 (54951)

### தேவை

ரெலிக்கொம் (SLT) தொலைபேசி இணைப்பு தேவை. விற்க விருப்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.:222 7646, 222 5115 (54960)

### D.C.M

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அலகு ரீதியான மீட்டலுடன் கூடிய Paper Class.
2007 A/L, DAY CLASS மாணவர்களுக்குரியது

தமிழ் - Mr.தமிழிந்திரன் (சனி, ஞாயிறு 11 மணி)
இந்துநாகரிகம் - Mrஜெயக்குமார் (தி, பு, வி 6.45மணி)
அளவையியல் - Mr.E.S.பவன் (சனி, ஞாயிறு 12 மணி)
குறிப்பு: பாடம் மாறிய மாணவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

### SPECIAL ENGLISH

* தொழில் பார்க்கும் உயர்கல்வி தொடரும் அரச அலுவலர்களுக்கும்.
* உரிய துரித கற்கை நெறி.
* சகல மொழித்திறன்களையும் கொண்டது.
* வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
* வார இறுதி வகுப்புகள்.

சனி, ஞாயிறு மு.ப 10 மணி
ஆசிரியர் : த.ந.பஞ்சாட்சரம்

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

A3, A4 கலர்பேப்பர் மற்றும் ஏனைய காகிதாதிகளும் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே.: 222 6115 (54959)

### புலமைப்பரிசில் வினாத்தாள்கள்

நேற்று நடைபெற்ற புலமைப்பரிசில் வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். தொகையாக பெற விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
351, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம். (54965)

### பிள்ளைகளுடன் வாருங்கள் பிரச்சினைகளைத் தீருங்கள்

சிறுவர் கண்காட்சி
2006
திங்கள் வரை
ஆஸ்பத்திரி வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள
"சிறுவர் மகிழ்வகத்தில்"

வாருங்கள் பாருங்கள் கூறுங்கள்

ஏற்பாடு : விழி உள சமூக அமையம்.
அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன்
அனுசரணை:
சிறுவர் மகிழ்வகம்

### புலமைப்பரிசில் வினாத்தாள் 04.11.2006

நேற்று நடைபெற்ற பரீட்சை வினாத்தாள் விடையுடன் விற்பனையாகிறது.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம். (54962)

### பல்கலைக்கழகப் படிவம் கல்வியாண்டு 2006/2007

பல்கலைக்கழக அனுமதி கோரி இதுவரையிலும் விண்ணபிக்கத் தவறியவர்களுக்கான படிவங்கள் விசேடமாகத் தருவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.
முடிவுத் திகதி : 30.11.2006
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். (54861)


# திருமண வரவேற்புபசாரம்

செல்வன் நடராசா மகேஸ்வரன் அவர்களுக்கும் செல்வி நாகசெல்வம் கல்யாணி அவர்களுக்கும் இன்று (05.11.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் திருமாங்கல்ய தாரண வைபவத்தை முன்னிட்டு மணமகன் இல்லத்தில் 6.11.2006 திங்கட்கிழமை வரவேற்புபசாரம் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

39/24, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி நடராசா ...
திரு.திருமதி தவச்செல்வன் வாசுகி குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி கார்த்திகேசு பொன்னு

(சிவபாக்கியம்)

வேலணை கிழக்கு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பொன்னு நேற்று (04.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - வள்ளி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், அமரர் கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கம்மா, சங்கரப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், கந்தையா, பொன்னையா, கதிரேசு, சின்னத்தங்கச்சி, பிள்ளையார், நல்லதம்பி, பூரணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.11.2006) பி.ப 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
வே.பி.சண்முகநாதன்,
(பேரமகன்)
பொன்.கனகரத்தினம்.

அம்பாள் துணை

# அன்னைக்கு அஞ்சலிகள்

## செல்லையா இராசம்மா



காளி அம்பாளின் திருப்பணி வேலைகள் (1956) மற்றும் குடமுழுக்கு நிகழ்வு (1983) என்பன நிதிப்பற்றாக்குறையினால் தடங்கலுறாமல் திருவருள் கைகூடிச் செவ்வனே நிறைவேற உழைத்த இராசம்மா அன்னையின் பணியை நினைவு கூருவோம். தமது கணவருக்குப் பக்கத்துணையாக நின்ற அருட்தொண்டு ஆற்றிய அம்மா அவர்கள், 1983ஆம் ஆண்டில் திருப்பணி வேலைகளுக்கு தலைமை வகித்து வழி நடத்தியதை அம்பாள் அடியார் நீங்கா நினைவாகக் கொண்டிருப்பர். காளி அம்பாள் மீதுள்ள பக்திப் பெருக்கினால் 2005 ஆம் ஆண்டுவரை தள்ளாத வயதிலும் அன்னதானத் தொண்டையும் தளராது ஆற்றியவர். அம்மாவின் ஆன்மா அம்பாளின் பாதாரவிந்தங்களில் சாந்தி பெற இறைஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காளி கோயிலடி,
சங்கானை.

வல்லிபுரம் செல்லையா
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வைரவப்பிள்ளை சண்முகசுந்தரம்

(சுந்தரம்)



பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவப்பிள்ளை சண்முகசுந்தரம் 02.11.2006 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் ஆறுமுகம்- காலஞ்சென்ற சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் Dr. குலேஷ் (Polytech University Brooklyn, Newyork) காலஞ்சென்ற துஷித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கனேசமூர்த்தி, திருமதி சௌபாக்கியலட்சுமி சரவணபவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராமச்சந்திரன் (ஓய்வு பெற்ற சாலைப் பரிசோதகர் - இ.போ.ச), தனபாலசிங்கம், பாலச்சந்திரன் (பாலா - M.T.A, Newyork transit), சரவணபவானந்தன் (ஓய்வு பெற்ற ஓவசியர்) ஆகியோரின் சகலனும் தேவமணி, இராசமணி(ஆசிரியை -வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), சரஸ்வதி (U.S.A) ஆகியோரின் மைத்துனரும் சஜித்தா (யாழ். மருத்துவபீடம், 3ஆம் வருடம்), யசித்தா (கொழும்பு, மருத்துவபீடம், 3ஆம் வருடம்) ஆகியோரின் பெரிய தந்தையும் சந்திரகுமார், ஆனந்தலட்சுமி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

46/7, St. Benerdilt Mawathe
Colombo-13
011 2430745

300, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே : 0212226839

தகவல்:
தவமணி (மனைவி)
கோ.இராமச்சந்திரன்.
திருமதி.இ.தனபாலசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாப் பேச்சு முடிந்த கையோடு அரசு விடுத்த 'பயங்கரவாதச் செய்தி'

## கிளிநொச்சி குண்டுவீச்சுக் குறித்து தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, நவ. 5

கிளிநொச்சி மருத்துவமனை வளாகப் பகுதியில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் மூலம் ஸ்ரீலங்காவின் அரச பயங்கரவாதம் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியுள்ளதாவது:-

ஜெனிவாப் பேச்சுமேசையில் சர்வதேச சமூகத்தின் முன்பாக வலிந்த தாக்குதல்களை நிறுத்துவதாக ஸ்ரீலங்கா அரசு உறுதியளித்தது. ஆனால், ஜெனிவாவிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் குழு கிளிநொச்சிக்குத் திரும்பி 24 மணிநேரத்துக்குள் ''பயங்கரவாதச் செய்தியை''த் தெரிவிக்கும் வகையில் கிளிநொச்சி மருத்துவமனை மீது பயங்கரமான வான்குண்டுத் தாக்குதலை நடத்தி அப்பாவிக் குடும்பத்தினரை கொன்று பொதுமருத்துவமனை வளாகத்தில் சிகிச்சைபெற்றுக் கொண்டிருந்த நோயாளர்களை அச்சத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

மருத்துவமனைகள் மிகவும் மனிதாபிமான தேவைகளுக்காக சேவையாற்றுகின்ற இடம். எந்த ஒரு வன்முறை நடவடிக்கைகளிலிருந்தும் அவை விலக்கப்பட வேண்டும். ஆனால், அவற்றையும் ஸ்ரீலங்கா இராணுவம் இப்போது இலக்கு வைத்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவா மாநாடுகளின் தீர்மானங்களின்படி மருத்துவமனை வளாகங்களை பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்த ஸ்ரீலங்கா அரசானது சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுடன் ஒத்துழைக்கவில்லை.

இந்தக் கொடூரமான தாக்குதலைக் கண்டிப்பதில் சர்வதேச சமூகம் எதுவித தயக்கமும் காட்டக்கூடாது.

வன்முறைகளையும் வலிந்த தாக்குதல்களையும் கைவிட்டு அமைதி முயற்சிகள் நடைபெற ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவோம் என்று ஸ்ரீலங்காக் குழுவினர் தெரிவித்திருந்தமைக்கு சர்வதேச சமூகமே சாட்சியாகும்.

இத்தகைய நிலைமைகள் பேச்சுகளுக்கான முன்னெடுப்புகளை நிச்சயமாக உருவாக்காது. ஸ்ரீலங்காவின் அரச பயங்கரவாத நடவடிக்கை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது - என்றார் சு.ப.தமிழ்ச் செல்வன். (ஐ)

## உலக அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துவோர் பட்டியலில் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு 2வது இடம்

### பின்லேடனுக்கு முதலாம் இடம்



லண்டன், நவ.5

உலக அமைதிக்கு ஆபத்தை ஏற்படுத்துபவர்கள் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இரண்டாவது இடத்தில் உள்ளார் என்று பிரிட்டிஷ் செய்தித்தாள் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட செய்தித்தாள் நடத்திய கருத்துக்கணிப்பில் இந்தத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ், இஸ்ரேல் மற்றும் மெக்ஷிக்கோ, கனடா ஆகிய நாடுகளில் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

அல்கெய்டா அமைப்பின் தலைவரான ஒசாமா பின்லேடன் இந்தப் பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ளார் என்றும் கருத்துக் கணிப்பு நடத்திய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்யக்கோரி ஜனாதிபதி மஹிந்தவிற்கு ஒரு லட்சம் ஈ-மெயில்

கொழும்பு, நவ.5

அதிபர்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்யுமாறு கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு லட்சம் ஈ-மெயில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தொழில்சார் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இன்றுமுதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை அதிபர்,ஆசிரியர்கள் இவ்வாறு தமது கோரிக்கையை முன்வைத்து ஈ-மெயில் அனுப்ப முடியும் என்றும்-

பொதுநிர்வாக அமைச்சின் 2006/6 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# புதிய அணுகுமுறையில் அமைதிப் பேச்சை தொடரக் கோருகிறது சமாதானப் பேரவை

கொழும்பு, நவ.5

காலத்தை வீணடித்து தாமதப்படுத்தமாமல், பல சுற்று சமாதானப் பேச்சுக்கான திகதிகளை நிர்ணயிப்பதற்கு அரசும் - விடுதலைப் புலிகளும் முன்வரவேண்டும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை அறிக்கையொன்றின் மூலம் இரு தரப்பாரையும் கேட்டிருக்கிறது.

அடுத்துவரும் பேச்சுகளில், மனிதாபிமான பிரச்சினைகளையும், அரசியல் பிரச்சினைகளையும் நேரம், காலம் ஒதுக்கி ஏக காலத்தில் பேசுவதற்கு முன்வருமாறும் சமாதானப் பேரவை கோரியிருக்கிறது.

இன மோதல்களுக்கு முடிவு கட்டுவதற்குப் புதிய அணுகுமுறை ஒன்று தேவை. இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது அரசாங்கத்துடன் இணையுமாறு ஐ.தே.கவுக்கு அழைப்பு விடுக்க எடுத்த முடிவு வரவேற்கத்தக்கதே. கட்சி அரசியல் நலனுக்கு அப்பால் நின்று, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இரு கட்சிகளின் தலைமைத்துவமும் சேர்ந்து பணி புரிவுதற்கு முன்வந்திருப்பதும் வரவேற்கத்தக்கது மட்டுமல்ல, இந்தப் பிரச்சினைக்கான தீர்வை புதிய அணுகுமுறையில் புதிய உற்சாகத்தோடு முன்னெடுப்பதற்கான அத்திபாராம் போடப்பட்டுள்ளது. என்றும், சமாதானப் பேரவை தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தம் ஒன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ஆனால், இரு தரப்பிலும் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. செஞ்சிலுவைச் சங்கமோ இதர மனிதாபிமான அமைப்புகளோ எதுவும் செய்ய இயலாது.

ஒரு மாதம் முன்பாக யாழ். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகம் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. தனி நபர்களும், குழுக்களும் செஞ்சிலுவைச் சர்வதேசகுழுவைத் தாக்கத் தயாராக உள்ளனர். காங்கேசன்துறைத் துறைமுகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பாகக் கப்பல் ஒன்று தாக்கப்பட்டது. அதற்கு யார் பொறுப்பு என்று தெரியவில்லை. இந்த நிலையில் உரிய பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாது நாம் கடல்வழியே பயணம் மேற்கொள்வது பாரிய ஆபத்தானது. இதனை நாம் மேற்கொள்ளவில்லை - என்றார் அவர். (ஐ)

## 2800 மெ.தொ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் - விமானம் மூலம் குடாநாட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்ட 18ஆயிரம் கிலோ குழந்தைகளுக்கான பால்மா படையினரால் யாழ்.அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மையம் தெரிவித்தது.

## காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரமுடியாத நிலை ஏற்படலாம். எனவே இந்த நிலையைக் கருத்திற்கொண்டு போதியளவு பொருள்களை தாமதமின்றி உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்க்கூட்டமைப்பின் சார்பில் அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் சேனாதிராஜா எம்.பி.சொன்னார். (த-12)

## புலமைப்பரிசில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகரை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்தக் கதி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் - இவ்விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் 'உதயனுக்கு' தெரிவிக்கையில்:-

இந்த மாணவர்கள் இரண்டாவது முறையாக ஏமாற்றமடைந்துள்ளனர். ஆயினும் இந்த மாணவர்களுக்கு தனியாக ஒரு பரீட்சை நடத்தப்படல்வேண்டும். அதுவரை புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளை வெளியிடக்கூடாது. நான் இது தொடர்பாக உதவிப்பரீட்சை ஆணையாளர் தர்மசேனவுக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். அவர் நாளை திங்கட்கிழமை இது குறித்து முடிவு செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

நாளை திருகோணமலை மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்சிங்கமும் நானும் கல்வி அமைச்சரைச் சந்திக்கவுள்ளோம்.

வடக்கு - கிழக்கில் ஏனைய பகுதிகளில் குறித்த இப்பரீட்சை சுமுகமாக நடைபெற்றுள்ளது. இடம்பெயர்ந்த நிலையில் உள்ள இம்மாணவர்கள் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அரியநேந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (12)

# முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதன் நினைவாக பிரிட்டனில் வைபவம்

பிரிட்டன், நவ.5

தமிழீழ விடுதலைப்புலிகளினால் 1990 ஆம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களின் நிலை தொடர்பாக இங்கிலாந்தில் பாரிய விழிப்பூட்டும் நிகழ்வொன்று கடந்த செவ்வாய்க்கிழமை பிரித்தானியப் பொதுச் சபையில் (House of Commons) வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இலங்கையர் நலன்களுக்குப் பொறுப்பான தொழில்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அன்டிலவ் என்பவரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இணைத்தலைமையை நிகழ்வின் ஏற்பாட்டாளரான லண்டன் ஸ்ரீலங்கா இஸ்லாமிய பேரவையின் தலைவர் நஜா முஹம்மட் ஏற்றிருந்தார் - என்று முஸ்லிம் காங்கிரஸ் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு இதுவரை காலமாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் தமது தாயக பூமியில் மீள் குடியேறுவது குறித்தும் அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதன் அவசியத்தையும் வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் அங்கு உரையாற்றினார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ - 7)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவு பங்கு வகிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிடம் கேட்டுவருகிறார்.

இதேவேளை - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாம் பதவி ஏற்று ஒரு வருடம் பூர்த்தியாகும் தருணத்தில் இம்மாதம் 17ஆம் திகதியை அண்டி புதுடில்லிக்கு வருவார் என்றும்-

அதன் பின்னரே மேயர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக உத்தராஞ்சல் மாநிலத்துக்குச் செல்வார் என்றும் மற்றொரு செய்தி நிறுவனம் தெரிவித்தது. (அ)

# சதாம் வழக்கில் இன்று தீர்ப்பு

ஈராக், நவ.5

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தொடர்பான வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

சதாம் ஹுசைன் உட்பட 7பேர் மீது தொடரப்பட்டுள்ள இந்த வழக்கில் பெரும்பாலும் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்படலாம்என ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் மற்றும் பெற்றோல், டீஸல் முதலியவற்றை எடுத்துச் செல்லவிடாமல் இராணுவம் தடுத்து வருகிறது.

இதனால் யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் பசியினாலும், பட்டினியாலும் மடிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது. ஒரேநாடு என்று சொல்லிக்கொண்டு, நாட்டின் ஒரு பகுதியில் வசிக்கும் மக்களை பசி, பட்டினியால் வதைத்து, மனிதப் படுகொலையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. இது இன்னொரு வகையான யுத்தம்.

இந்தக் கொடுமையை இந்தியா இனியும் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது.

இராணுவம் மூடி வைத்துள்ள நெடுஞ்சாலையை உடனடியாகத் திறந்துவிடும்படி இலங்கை அரசை இந்தியா வற்புறுத்தவேண்டும். அதற்கு கட்டுப்பட மறுத்தால், ஈழத்தமிழர்களைப் பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், மருந்து பொருள்களையும் இந்தியா உடனடியாக அனுப்பி வைக்கவேண்டும்.

கடந்த முறை நடந்ததைப் போல் வானூர்திகளைக் கொண்டு தமிழ் ஈழத்தில் உணவுப்பொருள்களை விநியோகிக்காவிட்டாலும், கப்பல்கள் வழியாக உணவுப்பொருள்களை இந்தியா அனுப்ப வேண்டும்.செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் இந்த உணவுப்பொருள்களை ஈழத்தமிழர்களுக்கு வழங்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் பட்டினிச்சாவில் இருந்து 6 இலட்சம் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

உலகில் இதுபோன்ற கொடுமைகள் நடந்தபோதெல்லாம் இந்தியா தன்னுடைய கண்டனக் குரலை எழுப்பி வந்திருக்கிறது. எனவே கூப்பிடும் தூரத்தில் இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் இந்தக் கொடுமையை இந்தியா இனியும் சகித்துக் கொண்டிருக்கக்கூடாது. இது தமிழகத்தில் வசிக்கும் தமிழர்களின் வேண்டுகோள் மட்டுமல்ல, உலகெங்கும் வாழும் தமிழர்களின் வேண்டுகோளும், விருப்பமும் ஆகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

CATWAS.COM
COMPUTER ACADEMY
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805
11.11.2006 புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA COURSES
Ms Office
DTP
Hard Ware
CERTIFICATE COURSES
Word XP/2003 Page Maker 7.0
Access XP/2003 Photo Shop 7.0
Excel XP/2003 Corel Draw 11.0
Power Point XP/2003 HTML
Kids Program
பதிவுக்கான திகதி 10.11.2006 க்கு முன்னர்

கணக்கீடு
பாலகஜன்
A/L DAY CLASS
புதிய பிரிவு
Mon-Fri 8.30-10.30a.m, 10.30-12.30p.m
ஆரம்பம்
06.11.2006 நாளை 8.30 a.m
BEACON யாழ்
வெலிங்டன்சந்தி அருகில்

LOGIC
M.பிரகாஸ்
A/L 2008, 2007
DAY
SAT/SUN 9-10 a.m.
புதிய பிரிவு ஆரம்பம்
5.11.2006, 6.11.2006
BRAIN POWER INSTITUTE
(சில்லாலை சந்தை அருகில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org